Registered as a Newspaper



# உதயன்

சுடர் : 40
கதிர் : 324

வெள்ளிக்கிழமை
17 ஒக்ரோபர் 2025

புரட்டாதி 31 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2056

பக்கங்கள் – 12
விலை – ரூபா 50

# தமிழ்த் தேசியப் பேரவை அடியோடு குலைகின்றது?

## ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியில் கஜேந்திரகுமார் எம்.பி. கடும் அதிருப்தி



யாழ்ப்பாணம், ஒக்ரோபர் 17

அரசியலமைப்பின் 13ஆம் திருத்தத்தை மையப்படுத்திய நகர்வுகளை ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியினர் மேற்கொள்வதைத் தொடர்ந்து, அந்தக் கூட்டணியுடனான அரசியற் கூட்டில் (தமிழ்த் தேசியப் பேரவை) இருந்து வெளியேறுவதற்குத் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி தீர்மானித்துள்ளதாக அறிய முடிகின்றது.

☞ 11

## ‘13’ நடைமுறையானால் வடக்கு சுயாதீனமாகும்!

### பதறுகின்றார் வீரசேகர

கொழும்பு, ஒக். 17

அரசியலமைப்பின் 13ஆவது திருத்தச்சட்டம் முழுமையாக நடைமுறைக்கு வந்தால், இலங்கை சமஷ்டி நாடாக மாற்றம் பெறும். அத்துடன் வடக்கு சுயாதீனமாக இயங்கத் தொடங்கும் என்று முன்னாள் அமைச்சர் சரத் வீரசேகர தெரிவித்

☞ 11

## கச்சதீவை மீட்பதற்கு ஹரிணியிடம் பேசுக!

### பிரதமர் மோடிக்கு ஸ்டாலின் வலியுறுத்து



சென்னை, ஒக். 17

கச்சதீவை மீட்பது தொடர்பிலும், தமிழக மீனவர்களின் விடுதலை தொடர்பிலும் பிரதமர் ஹரிணி அமரசூரியவுடன் பேச்சுவார்த்தை நடத்த வேண்டும் என்று, இந்தியப் பிரதமர் மோடியை தமிழக முதல்வர் ஸ்டாலின் வலியுறுத்தியுள்ளார்.

பிரதமர் ஹரிணி அமரசூரிய மூன்று நாள்கள் பயணமாக

☞ 11

### கீரிமலையில்

## கடற்படைக்கு ரேடர் அமைக்க காணிகளை வழங்கமுடியாது!

### வலி. வடக்கு சபையில் தீர்மானம்

யாழ்ப்பாணம், ஒக். 17

யாழ்ப்பாணம் - கீரிமலையில் கடற்படைக்கு றேடர் அமைக்கக்கோரும் இரண்டு ஏக்கர் காணியை வழங்க முடியாது என்று வலிகாமம் வடக்கு பிரதேச சபையில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

வலி. வடக்கு பிரதேச சபையின் மாதாந்த அமர்வு தவிசாளர் சோ. சுகிர்தன் தலைமையில் பிரதேசசபை

☞ 11

## ரயிலால் வீழ்ந்து பெண் உயிரிழப்பு

### சாவகச்சேரியில் சம்பவம்

யாழ்ப்பாணம், ஒக். 17

யாழ்ப்பாணம் - சாவகச்சேரிப் பகுதியில், ரயிலால் இறங்க முற்பட்ட பெண்ணொருவர் தவறி வீழ்ந்து உயிரிழந்தார். சு. சுபாசினி (வயது-53) என்ற பெண்ணே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

☞ 11

## கடலாமை இறைச்சியுடன் பாஷையூரில் ஒருவர் கைது

யாழ்ப்பாணம், ஒக். 17

யாழ்ப்பாணம் - பாஷையூர் பகுதியில் 35 கிலோ 400 கிராம் எடையுடைய ஆமை இறைச்சியுடன் சந்தேக நபர் ஒருவர் கைது நேற்றுக் கைது செய்யப்பட்டார்.

☞ 11



### கட்டுப்பாட்டை இழந்து

## மின்கம்பத்தில் மோதிய ஹைஏஸ் இரண்டு பெண்கள் பரிதாபச் சாவு:

### அநுராதபுரத்தில் துயரம்





யாழ்ப்பாணம், ஒக். 17

யாழ்ப்பாணம் - ஏழாலைப் பகுதியில் இருந்து, கொழும்பு நோக்கிப் பயணித்த வாகனம், சாரதியின் கட்டுப்பாட்டை இழந்து நேற்று அதிகாலை மின்கம்பத்துடன் மோதி விபத்துக்கு உள்ளானதில் இரண்டு

☞ 11

## சுற்றுலாப் பேருந்து மோதி மீன் வியாபாரி உயிரிழப்பு

### அல்லைப்பிட்டியில் சோகம்



யாழ்ப்பாணம், ஒக். 17

தென்னிலங்கையில் இருந்து யாழ்ப்பாணத்துக்குச் சுற்றுலா வந்தவர்களின் பேருந்து மோதி, மீன் வியாபாரியொருவர் நேற்று உயிரிழந்தார்.

அல்லைப்பிட்டியைச் சேர்ந்த கண்ணதாஸ் பிரேமதாசன்

☞ 11

### முச்சந்தி முரளி

‘கொள்கையில்லாம கூட்டுச் சேர்ந்தால் கடைசியில இப்பிடிக் குலைஞ்சுதானே போகும் கண்டியளோ’

## முள்ளியவளை விபத்தில் காயமடைந்தவர் இறப்பு!

முல்லைத்தீவு, ஒக். 17

முல்லைத்தீவு முள்ளியவளைப் பகுதியில் கடந்த செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற விபத்தில் காயமடைந்த குடும்பத்தலைவர் மேலதிக சிகிச்சையின்போது நேற்றுமுன்தினம் இரவு உயிரிழந்தார்.

முள்ளியவளை முதலாம் வட்டாரத்தைச் சேர்ந்த கந்தசாமி விசுவலிங்கம் (வயது-74) என்ற முதியவரே உயிரிழந்தவராவார். முள்ளியவளை வித்தியானந்தக்

☞ 11

## தகரக் குவியல் வீழ்ந்து குடும்பத்தலைவர் சாவு



யாழ்ப்பாணம், ஒக். 17

யாழ்ப்பாணம் நகரப் பகுதிக்கு அருகாக உள்ள இரும்புக் கடையொன்றில் தகரங்களை அகற்றியபோது, தகரக் குவியல் கழுத்துப் பகுதியில் வீழ்ந்ததில் படுகாயமடைந்த நபர் நேற்று உயிரிழந்தார்.

மயிலிட்டி வடக்கு காங்கேசன்துறைப்

☞ 11

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

| லொத்தர் | திகதி | சீட்டிழுப்பு இலக்கம் | ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கங்கள் | மேலதிகம் |
|---|---|---|---|---|---|
| கொவிசெத | 16.10.2025 | 4226 | P | 18 22 66 71 | விசேட எழுத்து P |
| ஹந்தஹறண ராசி சுப பலன் | 16.10.2025 | 1293 | | 10 16 27 55 | வெற்றி இலக்கினம் கடகம் |
| NLB ஜய | 16.10.2025 | 0252 | I | 1 5 4 0 | |
| மெகா பவர் | 16.10.2025 | 2332 | V | 14 32 56 69 | சுப்பர் இலக்கம் 02 |
| மஹஜன சம்பத | 16.10.2025 | 5984 | X | 1 4 3 1 2 7 | |
| தன நிதானய | 16.10.2025 | 2014 | F | 02 52 75 81 | விசேட எழுத்து F |
| அத சம்பத | 16.10.2025 | 0559 | X | 3 1 2 7 | |
| சுப தவசக் | 16.10.2025 | 0100 | | 10 30 41 | வெற்றி இலக்கினம் விருச்சிகம் |

# இலங்கை வரிக்கட்டமைப்பில் உடனடி மாற்றங்கள் அவசியம்

## மனித உரிமைகள் கண்காணிப்பகம் வலியுறுத்து

கொழும்பு, ஒக்.17

**இலங்கையில் மனித உரிமைகள் சார் கடப்பாடுகளை வலுப்படுத்துவதற்கும், தற்போதைய வரிக்கட்டமைப்பில் மறுசீரமைப்புகளை மேற்கொள்வதற்கும் உடனடியாக நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று மனித உரிமைகள் கண்காணிப்பகம் வலியுறுத்தியுள்ளது. மனித உரிமைகள் கண்காணிப்பகம் விடுத்துள்ள அறிக்கையொன்றிலேயே இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது.**

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது-

2022ஆம் ஆண்டு ஏப்ரலில் நாடு கடன்களை மீளச்செலுத்த முடியாத வங்குரோத்து நிலைக்குத் தள்ளப்படுவதற்குக் குறைந்தளவு வரி வருமானம் மிக முக்கியமான காரணமாக அமைந்தது. அதன் விளைவாக உருவான பொருளாதார நெருக்கடியை அடுத்து வேலை இழப்பு மற்றும் வருமான வீழ்ச்சி என்பன தீவிரமடைந்ததுடன், மனித உரிமைகளில் எதிர்மறைத்தாக்கத்தை ஏற்படுத்தக் கூடிய வகையில் வாழ்க்கைச் செலவு வெகுவாக அதிகரித்தது.

மனித உரிமைகளை உறுதிப்படுத்துவதற்கு பொருளாதார வளர்ச்சி மாத்திரம் போதுமானதன்று என்பதை இலங்கையின் பொருளாதார நிலவரம் தெளிவாகப் புலப்படுத்துகின்றது. இந்த நிலையில் செயற்றிறன்மிக்க வரிக்கட்டமைப்பை அரசாங்கம் அறிமுகப்படுத்துவதுடன் அவ்வருமானத்தை சகல இலங்கையர்களும் பயனடையக்கூடியவகையில் கல்வி மற்றும் ஏனைய அரச சேவை வழங்கலுக்கு ஒதுக்கீடு செய்ய வேண்டும்-என்றுள்ளது. (க-இ)

| சுபிரி தன சம்பத | | |
|---|---|---|
| திகதி | 16.10.2025 | |
| தினம் | வியாழக்கிழமை | |
| வெற்றி வாரம் | 0692 | |
| ஆங்கில எழுத்து | S | |
| வெற்றி இலக்கம் | 9 2 3 2 5 5 | |

| Super Ball | |
|---|---|
| திகதி | 16.10.2025 |
| தினம் | வியாழக்கிழமை |
| சீட்டிழுப்பு வாரம் | 2958 |
| ஆங்கில எழுத்து | I |
| வெற்றி இலக்கம் | 03 05 29 59 |

| சனிதா | |
|---|---|
| திகதி | 16.10.2025 |
| தினம் | வியாழக்கிழமை |
| ஆங்கில எழுத்து | X |
| வெற்றி இலக்கம் | 02 03 26 78 |
| வெற்றி வாரம் | 5019 |

| SASIRI | |
|---|---|
| திகதி | 16.10.2025 |
| தினம் | வியாழக்கிழமை |
| வெற்றி வாரம் | 0792 |
| வெற்றி இலக்கம் | 10 14 38 |

| லக்ன ராசி | |
|---|---|
| திகதி | 16.10.2025 |
| தினம் | வியாழக்கிழமை |
| மேஷம் | |
| வெற்றி இலக்கம் | 16 34 54 60 |
| சீட்டிழுப்பு வாரம் | 4670 |

| KAPRUKA | |
|---|---|
| திகதி | 16.10.2025 |
| தினம் | வியாழக்கிழமை |
| ஆங்கில எழுத்து | M |
| சுப்பர் இலக்கம் | 01 |
| வெற்றி இலக்கம் | 12 36 62 66 |
| வெற்றி வாரம் | 2134 |

| அத கோடிபதி | |
|---|---|
| திகதி | 16.10.2025 |
| தினம் | வியாழக்கிழமை |
| ஆங்கில எழுத்து | C |
| வெற்றி இலக்கம் | 22 32 45 50 |
| வெற்றி வாரம் | 2784 |



# ஜெய்சங்கரை சந்தித்தார் பிரதமர் ஹரிணி



கொழும்பு, ஒக்.17

இந்தியா சென்றுள்ள பிரதமர் ஹரிணி அமரசூரிய நேற்றுக் காலை இந்திய வெளிவிவகார அமைச்சரைச் சந்தித்துக் கலந்துரையாடியுள்ளார்.

இந்தச் சந்திப்புத் தொடர்பாகத் தனது சமூக ஊடகப் பக்கத்தில் பதிவிட்டுள்ள இந்திய வெளிவிவகார அமைச்சர் ஜெய்சங்கர், இலங்கை பிரதமர் ஹரிணி அமரசூரியவை டெல்லியில் சந்தித்ததில் மகிழ்ச்சி. இலங்கைக்கு இந்தியாவின் தொடர்ச்சியான ஆதரவு மற்றும் கல்வி மற்றும் திறன் மேம்பாடு ஆகியவற்றில் நமது ஒத்துழைப்பை வலுப்படுத்துவது குறித்து விவாதிக்கப்பட்டது" என்று குறிப்பிட்டுள்ளார். (எ-இ)

# தோட்டத் தொழிலாளர் சம்பளம் 25 அன்று முடிவு

கொழும்பு, ஒக்.17

மலையக பெருந்தோட்டத் தொழிலாளர்களின் சம்பள உயர்வு தொடர்பில் எதிர்வரும் 25ஆம் திகதி இறுதி முடிவு எடுக்கப்படும் என எதிர்பார்க்கின்றோம் என்று தேசிய மக்கள் சக்தியின் பதுளை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும், அகில இலங்கை தோட்டத் தொழிலாளர் சங்கத்தின் தலைவருமான கிட்ணன் செல்வராஜ் தெரிவித்துள்ளார்.

இந்த முடிவின் பிரதிபலன் தொடர்பான அறிவிப்பு எதிர்வரும் நவம்பர் 7ஆம் திகதி வரவு-செலவுத்திட்டம் முன்வைக்கப்படும்போது அரசாங்கத்தால் வெளியிடப்படும் எனவும் அவர் கூறினார். (எ-44)

# இஷாரா உட்பட அறுவரையும் தடுப்பில் வைக்க நடவடிக்கை

கொழும்பு, ஒக்.17

நேபாளத்தில் கைதுசெய்யப்பட்டு நாட்டுக்குக் கொண்டுவரப்பட்ட இஷாரா செவ்வந்தி உட்பட 6 பேரிடமும் மேலதிக விசாரணைகளை நடத்துவதற்காக தடுப்புக் காவல் உத்தரவுகள் பெறப்படவுள்ளன என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

நேபாளத்தில் கைதுசெய்யப்பட்ட, கணேமுல்ல சஞ்சீவ கொலைவழக்கின் பிரதான சந்தேகநபரான இஷாரா செவ்வந்தி உட்பட சந்தேகநபர்கள் அறுவர் நேற்று முன்தினம் நாட்டுக்குக் கொண்டுவரப்பட்டனர்.

இஷாரா செவ்வந்தி, உள்ளிட்ட நால்வர் கொழும்பு குற்ற விசாரணைப்பிரிவிலும் மற்றைய இரு சந்தேக நபர்களும் குற்றப் புலனாய்வுப் பிரிவின் பேலியகொடப் பிரிவிலும் தடுத்துவைக்கப்பட்டுள்ளனர். தற்போது இவர்களிடம் மேலதிக விசாரணைகளை மேற்கொள்வதற்குத் தடுப்புக்காவல் உத்தரவுகள் பெறப்படவுள்ளன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-இ)

# ரெலிபோனுடன் கலந்துரையாட யானையில் குழு



கொழும்பு, ஒக்.17

ஐக்கிய மக்கள் சக்தியுடன் தொடர்ந்து கலந்துரையாடல்களை மேற்கொள்வதற்காக மூவர் அடங்கிய குழுவொன்றைஐக்கிய தேசியக்கட்சிநியமித்துள்ளது. கட்சியின் பிரதித்தலைவர் ருவான் விஜேவர்த்தன உட்பட மூன்று பேர் கொண்ட குழு இதற்காக நியமிக்கப்பட் டுள்ளது என்று ஐக்கிய தேசியக் கட்சி அறிவித்துள்ளது. (எ-இ)

# பொறியியல் கூட்டுத்தாபன முன்னாள் பணிப்பாளர் கைது

கொழும்பு, ஒக்.17

அரச பொறியியல் கூட்டுத்தாபனத்தின் முன்னாள் பணிப்பாளர் நிலுதில் ஹார விஜேதாச இலஞ்சம் மற்றும் ஊழல் ஒழிப்பு ஆணைக்குழு அதிகாரிகளால் நேற்றுக் கைது செய்யப்பட்டுள்ளார்.

2019ஆம் ஆண்டு ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமையகமான சிறிகொத்தாவில் இடம்பெற்ற புனரமைப்புப் பணிகளில் அரச பொறியியல் கூட்டுத்தாபனத்தின் ஊழியர்களை முறைகேடாகப் பயன்படுத்தி அரசாங்கத்திற்கு நிதி இழப்பு ஏற்படுத்திய குற்றச்சாட்டில் அவர் கைது செய்யப்பட்டுள்ளார். (எ-இ)

# சாவகச்சேரி - புத்தூர் வீதியில் தொடர் திருட்டுச்சம்பவங்கள்

## காவலரண் அமைக்கக் கோரிக்கை

**சாவகச்சேரி, ஒக்.17**

**சாவகச்சேரி - புத்தூர் வீதியில் தொடர்ச்சியாக கொள்ளைச் சம்பவங்கள் இடம் பெற்றுவருகின்றன. அதனால் கனகன்புளியடிச்சந்தியில் பொலிஸ் அல்லது இராணுவக் காவலரணை அமைக்கவேண்டும் என்று அந்தப் பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.**

சாவகச்சேரி - புத்தூர் வீதியூடாகப் பாடசாலையில் இருந்து வீடு திரும்பி மோட்டார் சைக்கிளில் சென்றுகொண்டிருந்த ஆசிரியையை மோட்டார் சைக்கிளில் பின் தொடர்ந்த இருவர், ஆசிரியையின் சங்கிலியை அறுத்துச் சென்றுள்ளனர். மோட்டார் சைக்கிள் இலக்கத் தகடுகளை மறைத்தவாறு வந்த இருவரே கொள்ளையிட்டுள்ளனர்.

அண்மைய நாள்களில் நடந்த நான்காவது கொள்ளைச் சம்பவம் இதுவாகும். இந்தச் சம்பவத்துடன் தொடர்புடைய இருவரும் பின்னர் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர். இந்த வீதியில் தொடர்ச்சியாகக் கொள்ளைச் சம்பவங்கள் நடப்பதால் வீதியூடாக அச்சத்துடனேயே பயணிக்க வேண்டியுள்ளது. இதுதொடர்பில் பொலிஸார் உரிய நடவடிக்கை எடுக்கவேண்டும். பொலிஸ் காவலரண் ஒன்றை அமைக்கவேண்டும் என்று பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (க-131)

## பலசரக்குக் கடையில் தீ விபத்து

யாழ்ப்பாணம், ஒக்.17

வடமராட்சி கிழக்கு, செம்பியன்பற்று வடக்கில் உள்ள பல்பொருள் விற்பனைநிலையத்தில் தீ விபத்து ஏற்பட்டுள்ளது. நேற்றுமுன்தினம் இரவு விற்பனை நிலையத்தை மூடிவிட்டுச் சென்ற உரிமையாளர், நேற்றுக்காலை விற்பனை நிலையத்தைத் திறந்தபோது கடையின் உட்பகுதி தீயில் எரிந்துள்ளதை அவதானித்துள்ளார். இதுதொடர்பில் மருதங்கேணி பொலிஸ் நிலையத்தில் அவர் முறைப்பாடு செய்துள்ளார். தீ விபத்தில் கடையில் இருந்த தளபாடங்கள் மற்றும் பொருள்கள் சேதமாகியுள்ளன என்று தெரிவிக்கப்படுகின்றது. (எ-27)

## குப்பைமேட்டில் தீப் பரவல் பிரதேச மக்கள் பாதிப்பு



மன்னார், ஒக்.17

மன்னார்-தலைமன்னார் பிரதான வீதி பொதுமயானத்துக்குப் பின்புறம் நகரசபையால் கொட்டப்பட்ட கழிவுப்பொருள்களில் கடந்த சில தினங்களாக தீப் பரவல் ஏற்பட்டுள்ளது. இதனால் அந்தப்பகுதி மக்கள் பெரும் அசௌகரியங்களை எதிர்கொண்டுள்ளனர்.

தீப்பரவலால் குறித்த பிரதேசம் புகைமூட்டமாகக் காணப்படுகின்றது. பிரதான வீதியால் போக்குவரத்துச் செய்வோரும் இதனால் பாதிக்கப்பட்டுள்ளனர். பிரதி அமைச்சர் உபாலி சமரசிங்க, நாடாளுமன்ற உறுப்பினர்களான ஜெகதீஸ்வரன், காதர் மஸ்தான், மன்னார் நகரசபைத் தவிசாளர் உறுப்பினர்கள் மற்றும் அரச அதிகாரிகள் ஆகியோர் நேரில் சென்று நிலைமைகளை ஆராய்ந்தனர். இந்தப் பிரச்சினைக்கு வெகுவிரைவில் நடவடிக்கை எடுக்கப்படும். இதற்கு மக்கள் ஒத்துழைப்பு வழங்கவேண்டும் என்று பிரதியமைச்சர் தெரிவித்தார். (க-56,40)



## முரசுமோட்டை விபத்தில் மூவருக்குப் படுகாயம்

கிளிநொச்சிப் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட முரசுமோட்டையில் நேற்றுமுன்தினம் புதன்கிழமை ஏற்பட்ட விபத்தில் மூவர் படுகாயமடைந்து கிளிநொச்சி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர். பரந்தனிலிருந்து புதுக்குடியிருப்பு நோக்கி பயணித்த உழவு இயந்திரமும், புதுக்குடியிருப்பிலிருந்து பரந்தன் நோக்கிப் பயணித்த டிப்பர் வாகனமும் நேருக்குநேர் மோதி விபத்துக்குள்ளாகியுள்ளன. இந்தச்சம்பவம் தொடர்பாக கிளிநொச்சிப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (எ-25,113)

## தமிழக மீனவர்களின் மறியல் நீடிப்பு

இலங்கைக் கடற்பரப்புக்குள் எல்லைதாண்டி மீன்பிடித்த குற்றச்சாட்டில் கைதுசெய்யப்பட்ட தமிழக மீனவர்கள் 29பேரின்விளக்கமறியலும் எதிர்வரும் 29ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது. நெடுந்தீவுக் கடற்பரப்பில் மீன் பிடித்த குற்றச்சாட்டில் இவர்கள் வெவ்வேறு சந்தர்ப்பங்களில் கைதுசெய்யப்பட்டிருந்தனர்.

நேற்றுமுன்தினம் புதன்கிழமை இவர்கள் ஊர்காவற்றுறை நீதிமன்றில் முற்படுத்தப்பட்டபோது அவர்களின் விளக்கமறியல் நீடிக்கப்பட்டுள்ளது. (எ-66,26)

## தொடர் ஏறுமுகத்தில் தங்க விலை

கொழும்பு, ஒக்.17

தங்கத்தின் விலை நாளுக்கு நாள் அதிகரித்துவரும்நிலையில் நேற்றும் தங்கத்தின் விலை 10 ஆயிரம் ரூபாவால் அதிகரித்துள்ளதுஎன்றுஇலங்கை தங்கநகைக்கடை உரிமையாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது. நேற்றுமுன்தினம் மாலை வரை 24 கரட் தங்கம் பவுண் ஒன்று 3 இலட்சத்து 80 ஆயிரம்ரூபாவாகக்காணப்பட்டநிலையில், நேற்று 3 இலட்சத்து 90 ஆயிரம் ரூபாவாக விற்பனை செய்யப்பட்டது என்று அந்தச் சங்கம் தெரிவித்துள்ளது. அதே நேரம், 22 கரட் தங்கம் பவுண் ஒன்றின் விலை நேற்று 3 இலட்சத்து 58 ஆயிரம் ரூபாவாகக் காணப்பட்டது என்றும் அந்த சங்கம் குறிப்பிட்டுள்ளது. (எ-இ)




## காசைத் திருப்பித் தா..!

தொட்டகுறை விட்டகுறை மாதிரி இண்டைக்கு பஸ் பிரச்சினையைப் பற்றித்தான் பட்சி சொல்லப்போகுது. ஆனால் இது பிரைவேட் பஸ்ஸைப் பற்றின சங்கதியில்லை. உந்தச் சீ.ரி.பி. பஸ்ஸைப் பற்றின ஒரு சம்பவம் தான். யாழ்ப்பாணம் பெரியாஸ்பத்திரியில வேலைச் செய்யிற ஆக்கள் சீசன் ரிக்கெற் எடுத்து, சீ.ரி.பி. பஸ்ஸிலதான் காரைநகரில இருந்து யாழ்ப்பாணத்துக்கு வந்து போய்கொண்டிருக்கினம். ஆனால் அவை யாழ்ப்பாணம் வாறதுக்கு ஏறுற பஸ் அன்னநடை போட்டு ஆடி அசைஞ்சு ஒரு மணித்தியாலத்துக்குப் பிறகுதான் ரவுனுக்கு வந்து சேருமாம். பஸ்ஸால இறங்கி அடிச்சுப் பிடிச்சுக் கொண்டு போனால், ஆஸ்பத்திரியில இவையின்ர டியுட்டி ரைமுக்கு பிந்தித்தான் போகமுடியும். அதுக்கிடையில அந்த பஸ் சுழிபுரத்தில பத்துப் பதினைஞ்சு நிமிசம் அப்பிடியே நிக்குமாம். அப்பிடி அங்க மினக்கெடுற நேரத்தை விட்டிட்டு அப்பிடியே வந்திருந்தால் முக்கால் மணித்தியாலத்தில ரவுனுக்கு வரலாம். அப்பிடி இடையில நிக்காமல் பஸ் வந்தால் தாங்களும் டியூட்டிக்கு பிந்திப் போகவேண்டி இருக்காது எண்டும், டியூட்டிக்கு ரைமுக்கு போறதுக்காக ஒரு மணித்தியாலப் பயணத்துக்காக தாங்கள் ரண்டு மணித்தியாலத்துக்கு முதலே பஸ் ஏறவேண்டிக் கிடக்கு எண்டும் அவை சொல்லுகினம்.

இப்பிடித்தான் ரண்டு கிழமைக்கு முதல் அவர் வழமைமாதிரி வேலைக்குப் போறதுக்காக காரைநகர் டிப்போவுக்கு போயிருக்கிறார். ஆனால் பஸ் வெளிக்கிடேலை. என்ன ஏதெண்டு போய் விசாரிச்சால், அண்டைக்கு அந்த பஸ் போகாதாம். ஒரு மணித்தியாலத்துக்குப் பிறகு அடுத்த பஸ் தான் போகுமெண்டிருக்கினம். அந்த பஸ்ஸில போனால் நல்லாப் பிந்திப்போடும் எண்டதால, அங்க நிண்டவை மினிபஸ்ஸில போக வெளிக்கிட்டிருக்கினம். ஆனால் சிலரிட்ட கையில காசு இருக்கேலை. அதால டிப்போ மனேச்சரிட்டப் போய், ' சீசனை நம்பி கையில காசும் எடுத்துக்கொண்டு வரேலை. இப்ப நாங்கள் டியூட்டிக்கு போகவேணும் எண்டால் மினிபஸ்ஸிலதான் போகோணும்.அதுக்கு சீசனில வெட்டுற காசைத் தாங்கோ' எண்டு கேட்டிருக்கினம்.

அதுக்கு 'அப்பிடி சீசனுக்குப் பதிலா காசு குடுக்க சட்டத்தில இடமில்லை. நீங்கள் வேளைக்குப் போகோனுமெண்டால் முதல் பஸ்ஸில போயிருக்கோணும் ' எண்டு மனேச்சர் சொல்ல ' நீங்கள் பஸ் ஓடாமல் விட்டதுக்கு நாங்கள் என்ன செய்யேலும்?' எண்டு அவையும் பதிலுக்கு கேட்டிருக்கினம். அதுக்கு ' பஸ்ஸெண்டால் அப்பிடித்தான். அடிக்கடி பழுதாகும், பிரேக் டவுணாகும், அதெல்லாம் நாங்கள் சாத்திரம் பாத்துக்கொண்டு இருக்க முடியாது. நீங்கள் தான் ரைமுக்கு போகோணும் எண்டால் முதல் பஸ்ஸில போயிருக்கோணும்' எண்டு விடாப்பிடியா நிண்டிருக்கின்றார் மனேச்சர். வேலைக்குப் போறவையும் கொடாக்கண்டர்களாக ' இப்ப சீசன் காசை திருப்பி தர ஏலுமோ? ஏலாதோ?'எண்டு வாக்குவாதப்பட்டு, பிரச்சினையாகி,பொலிஸில முறைப்பாடு செய்யிற அளவுக்கு நிலைமை போட்டுது. ஆனால் இன்னமும் டிப்போ மனேச்சரை பொலிஸ் விசாரிக்கேலையாம். 'பொலிஸ் கூப்பிட்டும் அவர் போகேலை'எண்டு சனம் சொல்லுது. ஆனால் 'பொலிஸ் இன்னும் கூப்பிடேலை. அதால போகேலை'எண்டு டிப்போக்காரர் சொல்லுகினம். என்னனெண்டாலும், சீசன நம்பியிருக்கிற சனத்துக்கு அந்த நம்பிக்கையைக் காப்பாத்த டிப்போக்காரர் பஸ்ஸை ஒழுங்காப் பராமரிச்சு, அதுகளை நினைச்சு நினைச்சு நிப்பாட்டாமல்,சொன்னநேரத்துக்கு ஓடவைக்கவேண்டியது அவையின்ர கடமையெல்லோ? அதைச் சரியாச் செய்யாட்டி சனம் தாங்கள் சீசனுக்கு குடுத்த காசைத் திருப்பக் கேக்கத்தானே செய்வினம் கண்டியளோ.

- பட்சி

padsi@uthayan.com

## Invitation for Bids (IFB)
### VENGALACHEDDIKULAM PRADESHIYA SABHA
### Acceleration of resettlement activities in northern & eastern province - 2025

1. The Chairman, Divisional Procurement Committee (Div.PC), on behalf of Vengalacheddikulam Pradeshiya Sabha now invites sealed bids from eligible and qualified bidders for the work(s) listed in the table below.

| S.No | Bid No. | Source of Fund | Name of the Work | Estimated Civil Cost (LKR in. Mn) | CIDA Grade Required | Required Bid Security | | Contract Period |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | Amount (Rs.) | Validity Period | |
| 1 | ARA/NP/VAV/VCKPS/2025/W/03 | ARA | Construction of Muthaliyarkulam Kudijiruppu Road (Metaling & Taring) | 4.23 | C8 & Above (Highway) | 42,500.00 | 19.01.2025 | 47 |

2. Bidding will be conducted through **National Competitive Bidding (NCB)** Procedure.
3. Interested eligible bidders may obtain further information from **Chairman, Vengalacheddikulam Pradeshiya Sabha, Mannar – Madawachchi Road [Email: cheddips@gmail.com] from 09.00 Hrs to 15.00 Hrs** and inspect the bidding documents at the address **Chairman, Vengalacheddikulam Pradeshiya Sabha, Mannar – Madawachchi Road, Cheddikulam .**
4. Qualification requirements to qualify for contract award is given in "Section 4 of the Qualification Information and Section 5 of the "**Schedule/Bidding Data**" of the Procurement Document for works.
5. A complete set of Procurement Documents in English language may be purchased by interested bidders on the submission of a written request to the address **Chairman, Vengalacheddikulam Pradeshiya Sabha, Mannar – Madawachchi Road Cheddikulam.** from **17.10.2025 until 02.11.2025 from 09.00 Hrs to 15.00 Hrs.** Upon payment of a non-refundable fee of **Three thousand Rupees only (3000.00). The method of payment will be by cash.**
6. Bids must be delivered to the address **Chairman, Divisional Procurement Committee, Vengalacheddikulam Pradeshiya Sabha, Mannar-Madawachchi Road, Cheddikulam on or before 3rd November 2025 and 14.00 Hrs.** Late bids shall be rejected. Bids will be opened in the presence of Bidders' representatives who choose to attend in person or vital at the address same above.
7. All bids must be accompanied by a Bid-Security of an amount and validity date mentioned in the table above.
8. The pre-bid meeting will be held on **23.10.2025 at 14.00 Hrs** at the Vengalacheddikulam Pradeshiya Sabha, Mannar- Madawachchi Road, Cheddikulam.

The address (es) referred to above is (are):

Chairman,
Divisional Procurement Committee.
Vengala cheddikulam Pradeshiya Sabha,
Mannar- Madawachchi Road, Cheddikulam
[Telephone No: **024 2260914** Fax No: **024 2260913**]
**17.10.2025**

(CR 46110) E

# கிராமத்தை குப்பைமேடாக மாற்ற ஒருபோதும் அனுமதிக்கமாட்டோம்

## மன்னார் சாந்திபுரம் மக்கள் எதிர்ப்பு

மன்னார், ஒக்.17



சாந்திரபுரம் கிராமத்தில் கழிவு சேகரிப்பு நிலையம் அமைக்கும் மன்னார் நகரசபையின் யோசனைக்கு அந்தக் கிராம மக்கள் கடும் எதிர்ப்புத் தெரிவித்துள்ளனர். தங்கள் கிராமத்தைக் குப்பைமேடாக மாற்றவேண்டாம் என்று அவர்கள் வலியுறுத்தியுள்ளனர்.

மன்னார் நகர சபை, தள்ளாடிப் பிரதேசத்தில் மக்கள் வசிக்காத பகுதியில் கழிவுகளைச் சேகரிக்க அனுமதி கோரியிருந்தநிலையில் அதற்கு அனுமதி வழங்கப்படவில்லை. அதையடுத்து சாந்திபுரம், சௌத்பார், தரவான்கோட்டை ஆகிய பிரதேசங்களுக்கு மத்தியில் உள்ள தனியாருக்குச் சொந்தமான காணி ஒன்றை 5 ஆண்டுகள் குத்தகைக்கு எடுத்துக் கழிவுகளைச் சேகரிப்பதற்கு நகரசபை தீர்மானித்துள்ளது.

சாந்திபுரம் பகுதியில் நகரச் சபைக்குச் சொந்தமான காணியில் குப்பைகள் கொட்டப்பட்டபோது மக்கள் ஒன்றுதிரண்டு வீதியை மறித்து போராட்டம் நடத்தியதால் அது நிறுத்தப்பட்டது. தற்போது நகரசபைக் காணிக்கு அருகில் உள்ள தனியார் காணி ஒன்றில் கழிவுகளைச் சேகரிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. குப்பைகள் சேகரிக்கும் பகுதிக்கு அருகில் உள்ள கிராமங்கள் அடிக்கடி வெள்ளப்பாதிப்புகளை எதிர்கொள்பவை. அங்கு குப்பைகள் கொட்டப்படுவதால் சுகாதாரச்சீர்கேடுகளும், தொற்றுநோய்களும் ஏற்படும் வாய்ப்புகள் உள்ளன. அதனால் அங்கு கழிவுகள் சேகரிக்கும் தீர்மானத்தை உடனடியாக நிறுத்த வேண்டும் என்று சாந்திபுரம் மக்கள் தெரிவித்துள்ளனர். இந்த இழுபறிநிலைமையால் கழிவுகள் சேகரிக்கும் செயற்பாடுகள் தடைப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்படுகின்றது. (எ-25,56)



உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

உண்மை - நேர்மை - அஞ்சாமை




# நுண்நிதிக் கடன்களுக்கு வைக்கப்படுமா முற்றுப்புள்ளி?

போருக்குப் பின்னர் வடக்கில் நுண்நிதிக் கடன்கள் பெரும் சமூகப் பிரச்சினையாக மாறியிருக்கின்றன. போருக்குப் பின்னரான வடக்கின் பொருளாதார–வாழ்வாதார நெருக்கடிச் சூழலைப் பயன்படுத்திக்கொண்ட பல நிதி நிறுவனங்கள் நுண்நிதிக் கடன்களை எவ்விதமான கட்டுப்பாடுகளுமின்றி வழங்க ஆரம்பித்தமை சமூகத்தின் மீது தீவிரமான பாதிப்புகளை ஏற்படுத்தின என்பதை மறுக்கமுடியாது. நுண்நிதிக் கடன்களை கட்டுப்படுத்தும் திட்டமிடப்பட்ட பொறிமுறையின் அவசியம் வலியுறுத்தப்படும் நிலையில், வேலணைப் பிரதேசசபை ஒரு நகர்வை எடுத்திருக்கின்றமை வரவேற்கத்தக்கது. ஆயினும் இந்த விடயத்தில் அரசாங்கமும் ஏனைய துறைசார்ந்த நிறுவனங்களும் நுண்நிதிக் கடன்களுக்கான ஒரு வரையறை ஏற்படுத்துவது அவசியமானது.

நுண்நிதிக் கடன்களின் அடிப்படை நோக்கம் வருமானம் குறைந்த மக்களுக்கு சிறு அளவிலான கடன்களை வழங்கி அவர்கள் சுயதொழிலில் ஈடுபட்டு பொருளாதார ரீதியாக தன்னிறைவு அடையச் செய்வதே. ஆனால், வடக்கில் நடந்தது அதற்கு நேர் எதிரானதே. நுண்நிதிக் கடன் நிறுவனங்கள் கேட்டுக்கேள்வியில்லாது கடன்களை வழங்க, பலர் பொருளாதாரச் சிக்கல்கள் காரணமாக கடன்களை சுயதொழில் நோக்கங்கள் இன்றி, உடனடி வாழ்வாதாரத் தேவைகளுக்குப் பயன்படுத்தியதால், அந்தக் கடன்கள் வருமானத்தை உருவாக்குவதற்குப் பதிலாக புதிய கடன் சுமைகளை மட்டுமே உருவாக்கின. இதுவே அவர்களை கடன் வலையில் சிக்க வைத்தது. வட்டிக் கட்டணங்கள் உயர்வதும், கடனைத் திரும்பப்பெறும் முறைகள் கடுமையாக மாறியதும் சமூக மனஅழுத்தத்தையும் குடும்ப வன்முறைகளையும் ஏற்படுத்தியிருக்கின்றன. இதன் உச்சக்கட்டமாகப் பலர் தமது உயிர்களை மாய்த்திருந்தனர். அண்மையில் கடற்றொழில் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர், கடன்தொல்லை காரணமாக பெண்கள் உயிரை மாய்த்துக்கொள்வது வன்னியில் அதிகரித்துள்ளது என்று குறிப்பிட்டிருந்தார். நுண்நிதிக் கடன்களாலும் வடக்கில் அதிகம் பாதிக்கப்படுவது பெண்களே. கடன்களை இலகுவான நடைமுறையில் வழங்கிவிடும் நுண்நிதி நிறுவனங்கள் கடனை மீளப்பெறும்போது கடுமையான முறையில் செயற்படுகின்றன. ஆய்வுகளின்படி நுண்நிதிக்கடன்கள் மூலம் சிறு வணிகங்கள் உருவாகியுள்ளன என்றாலும், வெற்றி விகிதம் மிகக் குறைவாகவே உள்ளது. அதனால் ஒரு கடனை அடைக்க மற்றொரு கடன் என்ற நிலைக்கே பெரும்பாலானவர்கள் தள்ளப்படுகின்றனர். இந்தக் கடன் அழுத்தம் மனநலப் பிரச்சினைகளையும், குடும்பப் பிரச்சினைகளையும் ஏற்படுத்துவதுடன் தவறான முடிவுகளுக்கும் தூண்டிவிடுகின்றது.

நுண்நிதிக் கடன்கள் மக்களுக்குப் பயனுள்ளவையாக மாறவேண்டுமாயின், நியாயமான விதிகளுடனும் கட்டுப்பாடுகளுடனும் அந்த நிறுவனங்கள் இயங்கும் போதே சாத்தியமாகும். முக்கியமாக நுண்நிதிக் கடன்களுக்கான வட்டி வீதங்களுக்கு ஒரு வரையறை இருக்கவேண்டியது அவசியம். இவ்வாறான கடன்களைப் பெறுபவர்களும், அதை எவ்வாறு முதலீடு செய்து வருமானமாக மாற்றுவது என்பதைத் திட்டமிடுவதும் முக்கியம். அதற்கான அறிவை அவர்களுக்கு வழங்குவதற்குரிய சாத்தியங்களையும் ஆராய வேண்டியது அவசியம். இந்த விடயத்தில் பிரதேசசபைகளும், நகரசபைகளும் தத்தம் பிரதேசத்தில் அவதானத்தைச் செலுத்தவேண்டும். நுண்நிதிக் கடன் விவகாரம் பெறுமனே பொருளாதாரத்துடன் தொடர்புடைய விடயமன்று, அது ஒரு குடும்பத்தின் – சமூகத்தின் அமைதி, வாழ்வு போன்றவற்றுடனும் தொடர்புபட்டது. ஆகையால் அதில் தீவிர கரிசனை எடுப்பதும், அந்தக் கடன் வலையில் சிக்கியுள்ளவர்களை மீட்டெடுப்பதற்கான திட்டங்களைச் செயற்படுத்துவதும் ஒரு பொறுப்பு. வேலணைப் பிரதேசசபையின் தீர்மானத்தை முன்மாதிரியாகக் கொண்டு ஏனைய உள்ளூர் நிர்வாக அமைப்புக்கள், துறைசார்ந்த நிதிக் கட்டமைப்பு நிறுவனங்கள் ஒன்றிணைந்து நுண்நிதிக்கடன் பிரச்சினைக்கு முற்றுப்புள்ளி வைக்கவேண்டும் என்பதே மக்களின் எதிர்பார்ப்பு.


செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111

செய்தி : news@uthayan.com
விளம்பரம் : advt@uthayan.com


## நாளொரு நல்வார்த்தை

ஒரு நொடி காலம்தான் என்றாலும்
அதைத் தனக்குத் தகுந்தவாறு
சாதகமாக்கிக் கொள்பவனே புத்திசாலி.

– கதே –




# ஐ.எம்.எப். மதிப்பாய்வுகள் 2027ஆம் ஆண்டு நிறைவுறும்



### மத்திய வங்கி ஆளுநர் நம்பிக்கை

**கொழும்பு, ஒக்.17**

**சர்வதேச நாணயநிதியத்தின் நீடிக்கப்பட்ட கடனுடன் தொடர்புடைய சகல மதிப்பாய்வு நடவடிக்கைகளையும் 2027ஆம் ஆண்டின் நடுப்பகுதியில் நிறைவு செய்ய எதிர்பார்க்கப்படுகின்றது என்று மத்திய வங்கி ஆளுநர் நந்தலால் வீரசிங்க தெரிவித்துள்ளார்.**

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-

கடந்த வருடம் இலங்கை ஐந்தாவது கடன் மீளாய்வை முழுமை செய்திருந்தது. இந்த மதிப்பாய்வு எதிர்வரும் டிசெம்பர் மாதத்தில் பணிப்பாளர் சபையில் முன்வைக்கப்படும். அதற்காக பல்வேறு விடயங்கள் தொடர்பாகக் கவனம் செலுத்த வேண்டியுள்ளது.

ஒன்று 2026ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டத்தை நிறைவேற்றிக்கொள்வது அவசியமாகும். அதற்கு மேலதிகமாக முக்கியமான மறுசீரமைப்புகளைச் செய்ய வேண்டியுள்ளது. அரசாங்க நிறுவனங்களை மறுசீரமைப்புச் செய்வது போன்ற விடயங்களும் உள்ளன. ஊழல் மற்றும் அரச பிரச்சினைகளுக்குத் தீர்வு வழங்கப்படவேண்டும்.

இந்தப் பயணத்தின் ஒரு பகுதியாக ஐந்தாவது மீளாய்வு அமையும். இலங்கை 8 மீளாய்வுகளை முழுமை செய்யவேண்டியுள்ளது. 2027ஆம் ஆண்டின் இடைப்பகுதியில் அவற்றை நிறைவுசெய்ய எதிர்பார்க்கின்றோம்-என்றார். (எ-இ)

## நம்பிக்கைதரும் கடன் சீரமைப்பு

கொழும்பு, ஒக்.17

இலங்கையின் கடன் மறுசீரமைப்பு நம்பிக்கையைக் கட்டியெழுப்பியுள்ளது என்று சர்வதேச நாணயநிதியத்தின் ஆலோசகரும், பணிப்பாளருமான டோபியாஸ் அட்சியன் தெரிவித்துள்ளார். அமெரிக்காவில் நடைபெற்ற ஊடக சந்திப்பொன்றிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

முற்போக்கு மற்றும் சந்தைக்குள் நுழையும் வாய்ப்பு இந்த வருடத்தில் உயர்மட்டத்தில் இருக்கிறது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். (எ-இ)

## இந்தியா சென்றார் பிரதமர்

கொழும்பு, ஒக்.17

பிரதமர் ஹரிணி அமரசூரிய உத்தியோகபூர்வப் பயணம் மேற்கொண்டு இந்தியா சென்றுள்ளார். பிரதமராகப் பதவியேற்ற பின்னர் அவர் உத்தியோகபூர்வமாக இந்தியாவுக்குச் செல்லும் முதலாவது சந்தர்ப்பம் இதுவாகும்.

இந்தப் பயணத்தின்போது இரு நாடுகளுக்கும் இடையிலான உறவை மேலும் பலப்படுத்துவதற்கான உயர்மட்ட சந்திப்புகளில் அவர் ஈடுபடவுள்ளார். இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி உட்பட பல சிரேஷ்ட இந்தியத் தலைவர்களுடன் அவர் சந்திப்புகளை மேற்கொள்வார் என்று தெரிவிக்கப்படுகின்றது. (எ-இ)

## ஊழல் பட்டியலில் 121ஆவது இடம்

கொழும்பு, ஒக்.17

ஊழல் அடிப்படையிலான பட்டியலில் இலங்கை 121ஆவது இடத்தைப் பிடித்துள்ளது என்று இலஞ்ச, ஊழல் விசாரணை ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகம் ரங்கா திசாநாயக்க தெரிவித்துள்ளார். வடமத்திய மாகாணத்தில் நடைபெற்ற நிகழ்வொன்றிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-

இலங்கையில் பலர் நேர்மையாக இல்லை. நாட்டில் ஊழல் அதிகரிப்பதற்கு அது ஒரு முக்கியமான காரணி. டிரான்ஸ்பரன்சி இன்டர்நெஷனல் 180 நாடுகளை அழைத்து ஊழல் குறித்த அளவுகோலை உருவாக்குகிறது. ஊழல் குறைவாக உள்ள நாடு முதலிடத்தில் உள்ளது. ஊழல் அதிகமாகவுள்ள நாடு 180ஆவது இடத்திலுள்ளது. இலங்கை 121ஆவது இடத்திலுள்ளது-என்றார். (எ-இ)

## கடவுச்சீட்டு குறியீட்டில் இலங்கை பின்னடைவு

கொழும்பு, ஒக்.17

2025ஆம் ஆண்டுக்கான ஹென்லி கடவுச்சீட்டுக் குறியீட்டில் இலங்கைக் கடவுச்சீட்டு சரிவைச் சந்தித்துள்ளது.

இலங்கைக் கடவுச்சீட்டு கடந்த ஆண்டைவிடவும் 6 இடங்கள் பின்தங்கி 98 ஆவது இடத்துக்குச் சென்றுள்ளது. இலங்கைக் கடவுச்சீட்டு பின்தங்கியமைக்குப் பல்வேறு காரணிகள் செல்வாக்குச் செலுத்துகின்றன என்று தெரிவிக்கப்படுகின்றது. (எ-இ)

**நாளை**

சனிக்கிழமை - ஐப்பசி 1

18.10.2025

சுபநேரம் : 03.02 - 04.32

ராகுகாலம் : 09.02 - 10.32

# INVITATION FOR BIDS 2025/07
## Valikamam South Pradeshiya Sabha, Chunnakam
## Council Fund – Stage 7

1. The **Chairman, Divisional Procurement Committee (DPC)**, on behalf of the, **Chairman, Valikamam South Pradeshiya Sabha, Chunnakam** invites sealed bids from eligible and qualified bidders for the works described in the table below. All the relevant details are described in the same table.
2. Bidding will be conducted through **National Competitive Bidding Procedure (NCB).**
3. To be eligible for contract award, the successful bidder shall not have been blacklisted and shall have been registered with the Construction Industry Development Authority (CIDA) in the field of building construction for grade mentioned in the table below.
**"Bidders shall also register themselves with the Registrar of Public Contracts, Sri Lanka, in terms of the public Contract Act No 03. of 1987 if the contract amount exceeds Rs.5.0 million".**
4. Qualification' requirements are indicated in section 4 of the **Procurement document**. Additional details are provided in the **Schedule**(Section 5) for **SBD 3** Documents
5. Interested bidders may obtain further information from address given below in 6 and inspect the bidding documents at the same place on any working days from during the document issuing period mentioned in table below between 09:00 hrs and 15:00 hrs. **(T.P:021-224-0017 )**
6. A complete set of Procurement Documents in English language may be purchased by interested bidders on the submission of a written application to the **Chairman, Divisional Procurement Committee ,Valikamam South Pradeshiya Sabha, KKS Road, Maruthanarmadam, Chunnakam from 9:00 hrs to 15:00 hrs. during the period stated in table above upon payment of non-refundable fees Rs 3,500.00 only**. The method of payment will be by cash.
7. Bids (Original & Duplicate) must be delivered to the **Chairman, Divisional Procurement Committee ,Valikamam South Pradeshiya Sabha, KKS Road, Maruthanarmadam, Chunnakam on or before 10.30 a.m as stated in table above**. Bid number must be written on the left-hand upper corner of the envelope. Late Bids will be rejected. Bids will be opened soon after closing in the presence of the Bidder's representatives who choose to attend at **Valikamam South Pradeshiya Sabha, KKS Road, Maruthanarmadam, Chunnakam**
8. Pre-Bid Conference will be held at Caltural Hall, **Valikamam South Pradeshiya Sabha, KKS Road, Maruthanarmadam, Chunnakam, commencing at 10.00 AM as stated in table above**

| | |
|---|---|
| **Document Issuing/Purchasing Period** | **From 2025.10.17 - 2025.10.30** |
| **Pre – Bid Conference** | **At 10.00 A.M On 2025.10.24** |
| **Closing and Opening of Bid** | **At 10.30A.M on 2025.10.31** |

| S.No | Bid ID | Description of Work | Estimate Cost – Civil cost (Rs.Mn) | Contract Period | CIDA /ICTAD Grade & Specialty | Bid validity Period | Required Bid Security / Bank Draft/ Security Deposit | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | Amount | Validity Period |
| **Council Fund** | | | | | | | | |
| 01 | NP/14/41(15)/02 /05/CF - D / 2025/44 | **Package 01**<br>1. Construction of Erlalai Navalady road (Ilankaiyarkon veethy) (J/201 & J/206)<br>2. Construction of by lane of Poothavarayar kovil road (J/207)<br>3. Renovation of Sub lane of Punnalaikkadduvan Puliyankinaththady (J/203) | 2.65 | 60 Days | C9 or above (High way) | 18/12/2025 | 27,000.00 | 15/01/2026 |
| 02 | NP/14/41 (15)/02/05/ CF - D / 2025/45 | **Package 02**<br>1. Construction of Meenadchi amman Kovilady Thodda paathai (J/209)<br>2. Construction of the road between Puththoor road 3rd junction & Eevinai (J/209) | 2.34 | 60 Days | C9 or above (High way) | 18/12/2025 | 24,000.00 | 15/01/2026 |
| 03 | NP/14/41 (15)/02/05 /CF- D / 2025/46 | Construction of Poovilady veethy (J/209) | 5.62 | 75 Days | C8 or above (High way) | 15/01/2026 | 57,000.00 | 12/02/2026 |
| 04 | NP/14/41(15)/02/05 /CF -D/ 2025/47 | **Package 03**<br>1. Construction of by lane of G G Ponnampalam veethy (J/208)<br>2. Construction of Erumpukkadavai Amman Kovilady road (J/211)<br>3. Construction of Near road of Kuppilan Keniyady Vairavar kovil (J/211)<br>4. Construction of 7th cross lane of Thidatpulam (J/208) | 3.27 | 60 Days | C9 or above (High way) | 18/12/2025 | 33,000.00 | 15/01/2026 |
| 05 | NP/14/41(15) /02/05/CF-D/ 2025/48 | **Package 04**<br>1. Construction of Cross road of Nilavarai Punnalaikkadduvan road (near of Mascon Junction) (J/209)<br>2. Renovation of Link road of Mandan veethy & Kalaiyarasi veethy (J/209)<br>3. Construction of Mangala amman veethy (J/209) | 2.36 | 60 Days | C9 or above (High way) | 18/12/2025 | 24,000.00 | 15/01/2026 |
| 06 | NP/14/41 (15)/02/05 /CF-D / 2025/49 | Reconstruction of Koththiyawaththai Ampanai road (J/199) | 4.59 | 60 Days | C8 or above (High way) | 18/12/2025 | 46,000.00 | 15/01/2026 |
| 07 | NP/14/41 (15)/02/05/ CF -D/ 2025/50 | **Package 05**<br>1. Renovation of Front lane of Police station at Kumarasamy pulavar road (J/196)<br>2. Renovation of Iyanar kovil Vayal road (J/199) | 5.30 | 75 Days | C8 or above (High way) | 15/01/2026 | 53,000.00 | 12/02/2026 |
| 08 | NP/14/41(15) /02/05/CF-D/ 2025/51 | Renovation of Pillaiyar kovil veethy (J/200) | 9.90 | 84 Days | C8 or above (High way) | 15/01/2026 | 100,000.00 | 12/02/2026 |
| 09 | NP/14/41(15)/02 /05/CF-D / 2025/52 | **Package 06**<br>1. Construction of 2nd by lane of Vilathiyady (J/208)<br>2. Construction of 6th lane of Anthiran road (J/187)<br>3. Renovation of Sankampulavu lane (Sayampu lane) (J/187) | 2.63 | 60 Days | C9 or above (High way) | 18/12/2025 | 27,000.00 | 15/01/2026 |

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 10 | NP/14/41(15) /02/05/CF-D/ 2025/53 | Construction of Access road and burning shed of Usathiyodai Hindu Cemetery (J/205) | 1.75 | 60 Days | C9 or above (High way & Buildings) | 18/12/2025 | 18,000.00 | 15/01/2026 |
| 11 | NP/14/41(15) /02/05/CF-D/ 2025/54 | Construction of Wholesale Outlet at Maruthanarmadam Market | 4.87 | 60 Days | C8 or above (Buildings) | 18/12/2025 | 49,000.00 | 15/01/2026 |
| 12 | NP/14/41(15) /02/05/CF/ 2025/55 | **Package 07** 1. Construction of Concrete Precast name board 2. The Improvements of head office ground floor feeding mother room, Vice Chairman room & Record room 3. Construction of Deco grill work at Sankuveli Community center & Construction of Sankuveli playground tank work 4. Renovation of Kothiyalady Semakkalai | 4.14 | 75 Days | C8 or above (Buildings) | 15/01/2026 | 42,000.00 | 12/02/2026 |

**Chairman,**
**Divisional Procurement Committee,**
**Valikamam South Pradeshiya sabha,**
**Chunnakam.**

**17.10.2025**

# கண்ணீர் அஞ்சலி



எமது முகாமைத்துவ கற்கைகள் வணிக பீடத்தின் சந்தைப்படுத்தல் துறை முன்னாள் தலைவர், சிரேஸ்ர விரிவுரையாளர்

அமரர்

## இளையதம்பி இரட்ணம்

அவர்கள் (14.10.2025) செவ்வாய்க்கிழமை காலமான செய்தி அறிந்து ஆழ்ந்த துயரமடைவதோடு அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த இரங்கல்களை தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனை பிரார்த்திக்கின்றோம்.

தோற்றம் 13.09.1953
மறைவு 14.10.2025

**சந்தைப்படுத்தல் துறை**
**முகாமைத்துவ கற்கைகள் வணிகபீடம்**
**யாழ்ப்பாண பல்கலைக்கழகம்**

(CS 59684) E

# மூக்குக்கண்ணாடி வழங்கலும் 'பொற்பணிச் செம்மல்' விருது வழங்கலும்

யாழ்ப்பாணம், ஒக். 17

வட மாகாண தந்தை செல்வா நற்பணி மன்றத்தின் ஏற்பாட்டில், கண்பரிசோதனை செய்தவர்களுக்கான மூக்குக்கண்ணாடி வழங்கும் நிகழ்வும், விருது வழங்கும் நிகழ்வும் மூளாய் - வேரம் பகுதியில் எதிர்வரும் 19 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணிக்கு நடைபெறவுள்ளன.

இதன்போது இப்பிரதேசத்தில் சமூகச் செயற்பாட்டாளர்களாக விளங்கும் ச.சின்னையா, மா. கணநாதன் மற்றும் ஆ.ஜெயராஜ் ஆகியோர் 'பொற்பணிச் செம்மல்' விருது வழங்கிக் கௌரவிக்கப்படவுள்ளனர். தொடர்ந்து ஸ்ரீ மீனாட்சி அம்மன் அறநெறிப்பாடசாலை மாணவர்களின் கலைநிகழ்ச்சியும் நடைபெறவுள்ளது.

நிகழ்வில் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பதில் செயலாளர் எம்.ஏ. சுமந்திரன் பிரதம விருந்தின ராகவும், மாகாணசபை முன்னாள் உறுப்பினர் ச.சுகிர்தன், வலிகாமம் மேற்குப் பிரதேசசபை தவிசாளர் ச.ஜெந்தன், உபதவிசாளர் க.லங்கேஸ்வரன் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களா கவும், மூளாய் சைவப்பிரகாச வித்தியாசாலையின் அதிபர் பா. பாலசுப்பிரமணியம், சட்டத்தரணி எஸ். சிவபாலசுப்பிரமணியம், மூளாய் கிராமசேவகர் சிவரூபன், வலிகாமம் மேற்கு பிரதேசசபை உறுப்பினர் நாகரஞ்சனி ஆகியோர் கௌரவ விருந்தினர்களாகவும் கலந்துகொள்ளவுள்ளனர். (ச-25)



அனர்த்த விழிப்புணர்வு தொடர்பான முன்னாயத்தச் செயலமர்வு யாழ்.மாவட்டச் செயலகத்தில் அண்மையில் நடைபெற்றது.

யாழ். மாவட்ட அனர்த்த முகாமைத்துவப் பிரிவின் பிரதிப் பணிப்பாளர் ரி.என்.சூரியராஜா தலைமையில் நடைபெற்ற செயமலர்வில் அரச திணைக்களங்கள், பாதுகாப்புப் பிரிவினர், சமூக அமைப்பினர் ஆகியோர் பங்கேற்றனர். (ச-25, 27)

# பெருமைமிகு பேராசான் ரட்ணம் அவர்களுக்கு மதிப்புமிக்க இறுதி அஞ்சலி



யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் , முகாமைத்துவக்கற்கைகள் வணிக பீடத்தின், சந்தைப்படுத்தல் துறையின் முன்னாள் துறைத் தலைவராகவும், ஓய்வுபெற்ற விரிவுரையாளராகவும் பணியாற்றிய பேராசான் ரட்ணம் அவர்கள் சிறந்த ஆசிரியராகவும், வழிகாட்டி மற்றும் கல்வித் தலைவராகவும் திகழ்ந்தார். யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் முப்பதுக்கும் மேற்பட்ட ஆண்டுகளாக அவர் அர்ப்பணிப்புடன் பணியாற்றி, எண்ணற்ற மாணவர்களின் அறிவுப்பரப்பையும், மனங்களையும், நடத்தையையும் ஒழுங்கமைத்தார். அவரது துறைசார் நிபுணத்துவம் அவரது காலத்தில் எல்லோராலும் முதன்மைப்படுத்தப்பட்டதோடு அது தலைமுறைகளை ஒழுங்கமைக்கும் பிரதான பணிக்கு மிகுந்த பங்களிப்பு நல்கியது.

> **இந்த உலகில் சிறந்த ஆசிரியர்களாக வாழ்ந்து இறந்த பின்னும் மாணவர்கள் மனதில் வாழ்வது அரிது. ஆனால் பேராசான் ரட்ணம் போன்றோர், தம் வாழ்வின் பின்னும் மாணவர்களின் அறிவின் உயிராகப் பிரகாசிக்கிறார்கள்.**

### ஆரம்பக் காலம் மற்றும் கல்வி

1953ஆம் ஆண்டு செப்டெம்பர் 13ம் திகதி யாழ்ப்பாணம் புன்னாலைக்கட்டுவனில் உழைப்பையும் நேர்மையையும் கல்வியையும் மதித்த ஒரு எளிய விவசாயக் குடும்பத்தின் தந்தையான திரு. இளையதம்பி மற்றும் தாயாகிய திருமதி நாகம்மா தம்பதிகளுக்கு மகனாகப் பிறந்தார். ஒரு எளிமையான குடும்பப் பின்னணியிலிருந்தும், கல்வியே முன்னேற்றத்திற்கும் சமூகப் பணிக்குமான உண்மையான பாதை என்ற நம்பிக்கையை அவரது பெற்றோர் அவருக்கு ஊட்டினர். அவர்களின் உற்சாகமும், ஊக்கமும் அவரது வாழ்நாள் முழுவதும் கற்றல் மற்றும் கற்பித்தல் பயணத்திற்கான அடித்தளமாக அமைந்தது. தனது தனிப்பட்ட வாழ்க்கையில், பேராசான் ரட்ணம் அவர்கள் அன்பும் அர்ப்பணிப்பும் கொண்ட ஆசிரியரான திருமதி. ரெஜி பிரான்சிஸ்கா அவர்களை மணந்தார். மனைவியின் மிகச் சிறந்த பராமரிப்பும் அன்பும் அவரது இறுதிக்காலத்தில் அமைதியான ஓய்வின் பின்னரான பொழுதுகளை மகிழ்வாக அமைத்துக்கொடுத்தது. அவர்களது இரு மகன்கள் ரோசி ஹரிந்த் மற்றும் ரஜிந்த் பெர்ஜில் அவர்கள் தந்தையின் கனிவும் தாழ்மையும் அர்ப்பணிப்பும் நிறைந்த பண்புகளை தொடர்ந்து வெளிப்படுத்துகின்றனர்.

பேராசான் ரட்ணம் அவர்கள் தனது ஆரம்பக் கல்வியை புன்னாலைக்கட்டுவன் மெதடிஸ்ட் மிஷன் தமிழ் கலவன் பாடசாலையில் ஆரம்பித்தார், அவரது ஆர்வமும் ஒழுக்கமும் சிறுவயதிலேயே அங்கு வெளிப்பட்டது. தொடர்ந்து தனது இடைநிலைக் கல்வியை வயாவிளான் மத்திய மகா வித்தியாலயத்தில் கற்றார், அங்கு அவரது தலைமைத் திறன்களும் கல்வி மேன்மையும் பிரகாசிக்கத் தொடங்கின.

அவர் தன்னுடைய சாதாரணதரக் கல்வியை அச்சுவேலி சரஸ்வதி மகா வித்தியாலயத்திலும் பின்னர் தனது உயர்தரக் கல்வியை சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரியிலும் கற்றார். இவை அனைத்தும் தலைமுறைகள் பலரையும் ஊக்குவித்த ஒரு சிறப்பான கல்வி மற்றும் தொழில் முறை பயணத்தின் தொடக்கமாக அமைந்தன. பேராசான் ரட்ணம் அவர்கள் தனது உயர் கல்வியை களனிப் பல்கலைக்கழகத்தில் வணிகத்துறையில் கற்று சிறப்புப் பட்டத்தினைப் பெற்றுக்கொண்டார். இலங்கையின் உள்நாட்டுப் போரின் மிகக் கடினமான காலத்தில் கல்வி கற்ற அவர், பெரும் சவால்களையும் இடையூறுகளையும் எதிர்கொண்டார். ஆனால் அவர் உறுதியுடனும், பொறுமையுடன் தனது ஆரம்பப் பட்டத்தை வெற்றிகரமாக நிறைவு செய்தார். பின்னர் அவர் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் மெய்யியல் முதுமாணிப் பட்டத்தினைப் பெற்றார். மேலும், AAT, NCBS மற்றும் UNDA தொழில்முறை பயிற்சிகளைப் பெற்று தனது கற்பித்தல் தளத்தை வலுப்படுத்தினார்.

### கல்விச் சேவை

பேராசான் ரட்ணம் அவர்கள் தனது பல்கலைக்கழக சேவையை 1986ஆம் ஆண்டு யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வணிகத் துறையில் தற்காலிக உதவி விரிவுரையாளராக ஆரம்பித்தார். 1989 முதல் 1991 வரை மீண்டும் பணியாற்றிய போது, அவரது உற்சாகமான கற்பித்தல் முறை மாணவர்களிடமும், சக ஊழியர்களிடமும் பாராட்டைப் பெற்றது. 1992 ஜூலை முதல் 2016 செப்டம்பர் வரை அவர் வணிக மற்றும் சந்தைப்படுத்தல் துறைகளில் விரிவுரையாளராகப் பணியாற்றினார். 2010 நவம்பர் முதல் 2016 செப்டம்பர் வரை முகாமைத்துவக்கற்கைகள் வணிக பீடத்தின் சந்தைப்படுத்தல் துறையின் துறைத் தலைவராக இருந்த காலம் பாடத்திட்ட மேம்பாடு மற்றும் மாணவர் ஈடுபாட்டில் சிறந்த முன்னேற்றத் திற்கான காலமாக அமைந்தது. முகாமைத்துவ மற்றும் வணிகத்துறையில் கற்கும் மாணவர்கள் மத்தியில் சந்தைப்படுத்தல் அறிவை சிறப்புமிகு பாடமாக வெளிப்படுத்துவதற்கு அவர் ஆற்றிய பணிகள் சந்தைப்படுத்தல் துறையின் வளர்ச்சியில் மிகவும் முக்கியமான காலமாகும்.

### கற்பித்தல் மேன்மை மற்றும் கல்விச் செயற்பாடுகள்

பேராசான் ரட்ணம் அவர்கள் கோட்பாடுகளையும் , கடினமான அறிவின் தொகுப்புகளையும் கதை சொல்வதனூடாக மாணவர்களுக்கு எளிமையாக கற்பிக்கும் திறன் கொண்டவர். அவர் நகைச்சுவையோடு செழித்த கற்பித்தல் பாணிக்காக புகழ்பெற்றவர். அவரது வகுப்புகள் உயிர்ப்புடன், உதாரணங்களால் நிறைந்ததாக இருந்தன. இதனால் இவரது வகுப்பறைகள் எப்போதும் நிறைந்தே இருக்கும். எந்தநேரத்திலும் மாணவர்கள் அணுகக்கூடிய ஆசான்களில் ஒருவராக மிக எளிமையான மனிதராக வணிகத் துறை மாணவர்கள் மாத்திரமின்றி கலைத்துறை மாணவர்கள் கூட அவரது பாடத்தை தமது விருப்பத்தெரிவாக தேர்ந்தெடுப்பதற்கு அவரது கற்பித்தல் முறையே அடிப்படையாக அமைந்தது. பல்கலைக்கழக கல்விச்சூழலில் வணிகமும் சந்தைப்படுத்தலும் கற்பித்த மிகச்சிறந்த ஆசிரியர்களில் அவர் மதிப்பு மிகு ஆசிரியராகவும் மாணவர்கள் நேசிக்கும் ஒரு ஆசானாகவும் திகழ்ந்தார். வட இலங்கையில் நீண்டகாலமாக நீடித்த போரின் கடினமான சூழலில் அவர் தன்னுடைய இளைய தலைமுறையை வழிநடத்துவதில் முழுமையாக ஈடுபட்டார். பல மாணவர்கள் இன்று வரை அவரது கல்விச் சேவையையும், அர்ப்பணிப்பையும் மறக்கவில்லை. உயர்தர கல்வியில் வணிகக்கல்வி பாடத்திற்கு அவர் ஆற்றிய சேவையும் அளப்பரியது. அன்றைய கால கட்டத்தில் வணிகத்துறையை உயர்தர மாணவர்கள் தேர்ந்தெடுப்பதற்கு காரணமாக இருந்த ஆசிரியப் பெருந்தகைகளில் பேராசான் ரட்ணம் அவர்களின் பங்களிப்பும் மகத்தானது. அவர் இலங்கை பரீட்சைத் திணைக்களம் நியமித்த உயர்தர பரீட்சையின் தலைமைத் தேர்வாளராகவும் பணியாற்றினார். சிக்கலான பொறுப்பு வாய்ந்த மதிப்பீட்டு பணிகளை மிகவும் திறமையுடன் கையாண்டு தனக்குப் பின் பல மதிப்பீட்டாளர்களை உருவாக்கினார். கல்வியாளராக அவரது தேசியப் பங்களிப்பு பாடத்திட்டத்தைத் தாண்டி, ஒழுக்கம், பண்பாடு மற்றும் நேர்மையை மாணவர்களிடம் சேர்த்தது. அன்றைய இக்கட்டான காலகட்டத்தில் தமிழ் மக்களின் கல்வி வளர்ச்சியில் பங்காற்றிய பெருமை எங்களுடைய பேராசானுக்கு அதிகம் உண்டு.

### சேவையும் வழிகாட்டலும்

1997 முதல் 2004 வரை பல்கலைக்கழகத்தின் மாணவர் ஆலோசகராகவும், 2001 முதல் 2010 வரை வணிக மாணவர் சங்கத்தின் சிரேஸ்ர பொருளாளராகவும், சிரேஸ்ர மாணவ ஆலோசகராகவும் பணியாற்றினார். மேலும், அவர் பல்கலைக்கழக ஆசிரியர் சங்கத்திற்கும் உலகப் பல்கலைக்கழக சேவை (WUS) அமைப்பிற்கும் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டு மிகச்சிறந்த பணியாற்றினார். பல்கலைக்கழக ஆசிரியர்கள் சார்பில் அவர்களது நலன் சார்ந்து எமது ஆசிரியர் மேற்கொண்ட செயற்பாடுகள் என்றைக்கும் மறக்க முடியாதவை. அவருடைய ஆலோசனையையும் வழிகாட்டலையும் பெறாத மாணவர்களும் அதனால் பயன் பெறாத மாணவர்களும் இல்லையென்றால் மிகையாகாது.

### இரக்கமும் நேர்மையும் கொண்ட மனிதர்

பல்கலைக்கழகம் மாணவர்களுக்காகவே உருவாக்கப்பட்டது என்னும் கருத்தை அடிக்கடி சொல்லிக்கொள்வார். அவரது ஒவ்வொரு செயற்பாடுகளும் அதன் அடிப்படையியேயே அமைந்திருந்தன. பொருளாதார நெருக்கடியில் இருந்த பல மாணவர்களுக்கு தனிப்பட்ட முறையிலும் குழுவாகவும் உதவி செய்து, அவர்களின் கல்விப் பயணத்தை உறுதியாக்கினார். ஏழை மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்கு அவர் ஆற்றிய பணி அவரால் பயன் பெற்ற மாணவர்களின் உயர்ந்த வாழ்வைப் பிரதிபலிக்கிறது.

### அவரது நினைவுகளுடன் மாணவர்கள்

1986 முதல் 2016 வரை நீண்ட 30 ஆண்டு சிறப்பாக பணியாற்றிய காலத்தில், மாணவர்களுக்கு அவர் வணிகத்தையும் சந்தைப்படுத்தலையும் மட்டும் கற்றுக்கொடுக்கவில்லை. நேர்மை, பணிவு, நன்னடத்தை, சமூக விழுமியம், கற்றலின் போதான நகைச்சுவை உணர்வின் முக்கியத்துவம், மாணவர்களுக்கு ஒரு வழிகாட்டியாக ஆசிரியர் இருக்க வேண்டிய அவசியம் என்பவற்றையும் சேர்த்துக் கற்பித்தார். அவரது பூதவுடல் இன்று அவரது இல்லத்திலிருந்து எடுத்துச்செல்லப்பட்டு மண்ணுக்குள் புதைக்கப்படுகிறது. பல்லாயிரம் மாணவர்களின் வாழ்வை வளப்படுத்திய ஒரு விருட்சம் இன்று விதையாகப் போகிறது. அவர் விதைத்த கல்வி விதைகள் ஆயிரக்கணக்கான மாணவர்களுடைய மனங்களில் பெரு விருட்சமாக கிளைபரப்பி வளர்ந்து கொண்டே இருக்கின்றன.

அவர் தன்னுடைய வாழ்வையும், வளர்ச்சியையும் தியாகம் செய்து மாணவர்களுடைய வளர்ச்சிக்காக பல மணிநேரங்களைச் செலவிட்டு பலருடைய தொழில் மற்றும் வாழ்வின் முன்னேற்றத்தில் ஏணியாக இருந்து வழிநடத்தினார். மாணவர்களின் முன்னேற்றத்திற்காக தன்னலமின்றி பணியாற்றினார். பலர் அந்த ஆசான் என்னும் ஏணியில் ஏறி உயர்ந்த நிலைகளுக்கு சென்று அவரது நினைவுகளை நமது வாழ்வின் முன்னேற்றங்களோடு சேர்த்து வணங்கி நிற்கிறார்கள். அவரது கற்பித்தல் முறை மற்றும் மதிப்பார்ந்த செயற்பாடுகள் இன்று அவரது மாணவர்களின் வழியாக உயிர்பெற்று நிற்கின்றன. பலர் சிறந்த ஆசிரியர்களாக விளங்குவது அவரது நிலையான கல்வி மரபின் சான்றாகும். எங்கள் வாழ்வில் இத்தகைய உன்னதமான ஓர் பேராசானை எமக்கு அருளியதற்காக நாம் இறைவனுக்கு நன்றி செலுத்துகிறோம் . அவரது நினைவு, போதனைகள், மற்றும் சிந்தனைகள் எங்கள் இதயங்களில் என்றும் நிலைத்திருக்கும். அவர் இறந்து போனாலும் அவை எம்மோடு கூட என்றும் வாழ்ந்து கொண்டிருக்கும்.

இறுதியாக அவரது வாழ்க்கை பின்வரும் பாடத்தை எமக்கு விட்டுச் செல்கிறது. இந்த உலகில் சிறந்த ஆசிரியர்களாக வாழ்ந்து இறந்த பின்னும் மாணவர்கள் மனதில் வாழ்வது அரிது, ஆனால் பலர் அவர் தம் வாழ்வின் பின்னும் மாணர்களின் அறிவின் உயிராக பிரகாசிக்கிறார்கள் . அறிவைப் பகிர்ந்து மட்டுமல்லாது ஞானத்தையும் நோக்கத்தையும் மாணவர்களுக்கு விழிப்பூட்டும் ஆசிரியர்கள் காலத்தால் போற்றி கௌரவிக்கப்பட வேண்டியவர்கள். பேராசான் ரட்ணம் அவர்கள் காலம் எமக்களித்த பரிசு. அவரது நினைவுகள் காலத்திற்கும் அழியாது யாழ்ப்பாணப்பல்கலைகழக வரலாற்றோடு இணைந்து மாணவர்களின் மனதில் நீங்காது என்றும் வாழ்ந்து கொண்டிருக்கும்.

அவரது ஆத்மா சாந்தியும் நிரந்தர அமைதியும் பெறட்டும்.

*அவரது அறிவு, கருணை மற்றும் வழிகாட்டுதலால் பயனடைந்த அனைத்து மாணவர்கள் சார்பாகவும்*

**பேராசிரியர் திருமதி. சிவாணி சண்முகதாஸ்**
துறைத்தலைவர்
சந்தைப்படுத்தல் துறை
முகாமைத்துவக்கற்கைகள் வணிக பீடம்
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

# தெய்வீக இசை அரங்கம்

சந்நிதியான் ஆச்சிரம சைவகலைப் பண்பாட்டுப் பேரவையின் ஏற்பாட்டில் வாராந்த நிகழ்வாகத் தெய்வீக இசை அரங்கம் சந்நிதியான் ஆச்சிரம மண்டபத்தில் இன்று வெள்ளிக்கிழமை மு.ப. 10.30 மணிக்கு நடைபெறவுள்ளது. அதில் இசைக் கலைமணி நடேசு செல்வச்சந்திரன் குழுவினரின் தெய்வீக இசை அரங்கம் இடம்பெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (எ-25,66)



# ஊரெழு கணேச வித்தியில் நூலகசேவை நிகழ்வு

யாழ்ப்பாணம், ஒக்.17

யாழ். பொதுசன நூலகத்தின் நூலகசேவையும், விழிப்புணர்வு நிகழ்ச்சிகளும் ஊரெழு கணேச வித்தியாலய அதிபர் இரா.ஜெயக்குமார் தலைமையில் வித்தியாலயத்தின் பிரதான மண்டபத்தில் இன்று வெள்ளிக்கிழமை மு.ப. 9 மணிக்கு நடைபெறவுள்ளது. (எ-25)

# யூனியன் கல்லூரியில் மணிக்கூட்டுக்கோபுரம்

யாழ்ப்பாணம், ஒக்.17

தெல்லிப்பழைச் சந்தியின் வடமேற்கு மூலையாக தெல்லிப்பழை யூனியன் கல்லூரி வளாகத்தில் அமைக்கப்பட்ட மணிக்கூட்டுக்கோபுரம் நேற்றுமுன்தினம் புதன்கிழமை திறந்து வைக்கப்பட்டது.

இந்த மணிக்கூட்டுக்கோபுரம் தெல்லிப்பழை யூனியன் கல்லூரியின் பழையமாணவர் த. விஜயகுமாரின் நிதிப்பங்களிப்புடன் அவரது தந்தை க.தணிகாசலம் ஞாபகார்த்தமாக நிர்மாணிக்கப்பட்டுள்ளது. (எ-25,27)

**காணி விற்பனைக்கு**

நல்லூர் குறுக்கு வீதியில் 6 3/4 பரப்பு காணி விற்பனைக்கு.

தொடர்புகளுக்கு

077 364 0941

**கண்ணீர் அஞ்சலி**

**இளையதம்பி இரட்ணம்**

(யாழ்.பல்கலைக்கழக
ஒய்வுநிலை சிரேஸ்ட
விரிவுரையாளர், முன்னாள்
சந்தைப்படுத்தல் துறை
தலைவர்
யாழ். பல்கலைக் கழகம்)



எம் குடும்ப பேராளுகையே
கல்விப் பெருந்தகையே
எம்மைவிட்டு எங்கு சென்றீர்
ஏங்குதையா எங்கள் மனம்

அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பிரிவால் துயருறும்
மைத்துனர்மார், மைத்துனிமார்.

(CS 30607) A

# நிறுவுநர் தினமும் பரிசளிப்பு விழாவும்

யாழ்ப்பாணம், ஒக். 17

சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரியின் நிறுவுநர் தினமும் பரிசளிப்பு விழாவும் கல்லூரியின் முதல்வர் வ.நந்தீஸ்வரன் தலைமையில் கல்லூரியின் பவளவிழா மண்டபத்தில் எதிர்வரும் 19ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை 9 மணிக்கு ஆரம்பமாகி இடம்பெறவுள்ளன.

நிகழ்வில் பிரதம அதிதியாக வடமாகாண பிரதி பிரதம செயலாளர் இ.சிவரூபன், சிறப்பு அதிதியாக வலிகாமம் கல்வி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் சி.சிவசிவா, கௌரவ அதிதியாக கலாசார அபிவிருத்தி உத்தியோகத்தர் க.ஜெசிந்தன் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர். (ச-25-63-40)

# ஒக்ரோபர் 26 ஆம் திகதி வடக்கில் நீண்ட மின்தடை

## மன்னார் மட்டும் விதிவிலக்கு

யாழ்ப்பாணம், ஒக். 17

ஒக்ரோபர் மாதம் 26ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை, வடக்கு மாகாணத்தில் மன்னார் மாவட்டம் தவிர்ந்த ஏனைய மாவட்டங்களில் 13 மணித்தியாலங்கள் மின்சாரம் தடைப்படுமென இலங்கை மின்சார சபையினர் அறிவித்துள்ளனர்.

மின் கட்டமைப்பில் அவசியம் தேவையான மாற்றத்தைக் கொண்டுவரவே இந்த மின்தடை அமுல்படுத்தப்படவுள்ளது. இதற்கமைய, குறித்த தினத்தன்று காலை 6 மணி முதல் இரவு 7 மணி வரை யாழ்.மாவட்டம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா ஆகிய நான்கு மாவட்டங்களிலும் மின்சாரம் தடைப்பட்டிருக்கும்.

எனவே, இதனைக் கருத்திற்கொண்டு மக்கள் முன்னேற்பாட்டு நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்று அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது. (ம-66)

**3ஆம் ஆண்டு நினைவஞ்சலி**

| தோற்றம் | மறைவு |
|---|---|
| 03 . 04 . 1944 | 21 . 09 . 2022 |



**இராசரத்தினம் சின்னத்தங்கம்**

இமை மூடும் நேரத்தில்
எங்களை விட்டுப்பிரிந்தாய் - அம்மா
உன் நினைவுகளே எங்களுக்கு
வழிகாட்டும் ஒளி விளக்கு...
ஆண்டுகள் மூன்றாகியும்...
மீளாத்துயருடன் தவிக்கின்றோம் அம்மா...
உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப்
பிரார்த்திக்கின்றோம்.

உங்கள் பிரிவால் வாடும்
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.

(CS 59663) A

வடலியடைப்பு இந்து இளைஞர் மன்ற வாணி விழா மன்றத்தலைவர் துவாரகன் தலைமையில் அண்மையில் நடைபெற்றது. விழாவில் மாணவர்களின் கலை நிகழ்ச்சிகளும், ஆசிரியர்களுக்கான கௌரவிப்பும் இடம்பெற்றதோடு, போட்டிகளில் வெற்றிபெற்றவர்களுக்கான பரிசில்களும் வழங்கப்பட்டன. (ச-25)



# நீர்ப்பாசன முறைமைக்கான மானியம்

சாவகச்சேரி, ஒக். 17

தென்மராட்சிப் பிரதேசத்தில் தென்னைச் செய்கை மேற்கொள்ளும் விவசாயிகளுக்கு, நீர்ப்பாசன முறைமை ஒன்றை அமைப்பதற்கான மானியம் வழங்குவதற்காக தென்னைப் பயிர்ச்செய்கை சபையால் விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. மேலதிக விவரங்களுக்குத் தங்களுக்கு அருகில் உள்ள கமநல சேவை நிலையங்களில் கடமையாற்றும் தெங்கு அபிவிருத்தி உத்தியோகத்தருடன் தொடர்பு கொள்ளமுடியும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (எ-25,9)

**கண்ணீர் அஞ்சலி**

| தோற்றம் | மறைவு |
|---|---|
| 16.06.1946 | 15.10.2025 |



**பாலசிங்கம் சாயாதேவி (வசந்தி)**
சரவணை கிழக்கு வேலணை.

நாரந்தனை சரவணை கர்ணந்தோட்டம் ஸ்ரீ சிவசுப்பிரமணிய சுவாமி கோவில் இராஜ கோபுரத் திருப்பணிச்சபை நிர்வாக சபை உறுப்பினரும் முருகன் தொண்டருமாகிய திரு.பாலசிங்கம் தவபாலன் அவர்களின் அன்புச் சகோதரியின் பிரிவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய முருகனைப் பிரார்த்திக்கின்றோம்.

இராஜ கோபுர திருப்பணிச்சபை
ஆலய பரிபாலன சபை.
நாரந்தனை சரவணை கர்ணந்தோட்டம்
ஸ்ரீ சிவசுப்பிரமணிய சுவாமி கோவில்.

(CS 30606) A



# இன்றைய
(ராசிபலன்)

**மேடம்:** தேவையான பணம் இருப்பதால் சமாளித்து விடுவீர்கள். வாழ்க்கைத்துணைவழியில் மகிழ்ச்சி தரும் செய்தி வந்துசேரும். உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. உறவினர்களுடன் கருத்துவேறுபாடு ஏற்பட வாய்ப்பு உள்ளதால் பொறுமை அவசியம்.

**இடபம்:** இன்று பலவகைகளிலும் அனுகூலமான நாள். சிலருக்கு எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. அரசாங்கக் காரியங்கள் சாதகமாகமுடியும். வாழ்க்கைத்துணைவழி உறவுகளிடம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும்.

**மிதுனம்:** இன்று எதிர்பாராத பணவரவுக்கும் திடீர்ச் செலவுகளுக்கும் வாய்ப்பு உண்டு. சில ருக்கு உறவினர்களுடன் மனஸ்தாபம் ஏற்பட வாய்ப்புள்ளதால் அவர்களுடன் பேசும்போது வார்த்தைகளில் நிதானம் தேவை. தந்தை யு டன் அனுசரணையாக நடந்துகொள்ளவும்.

**கடகம்:** காரியங்கள் அனுகூலமாகும். புதிய முயற்சி எடுப்பதற்கு சாதகமான நாள். செலவு களைச் சமாளிப்பதில் சிரமம் எதுவும் இருக்காது. நண்பர்களிடமிருந்து எதிர்பார்த்த தகவல் கிடைக்கும்.

**சிம்மம்:** கணவன்–மனைவிக்கிடையே ஏற்பட்டிருந்த பிணக்குகள் நீங்கும். உறவினர்களால் குடும்பத்தில் சில பிரச்சினைகள் ஏற்பட்டாலும் சாதுர்யமாகச் சமாளித்துவிடுவீர்கள். சகோதரர்க ளால் ஆதாயம் உண்டு.

**கன்னி:** தந்தைவழி உறவுகளால் பணவரவுக்கு வாய்ப்பு ஏற்படும். முக்கியமான முடிவுகளை பிற்பக லுக்குமேல் மேற்கொள்வது சாதகமாகமுடியும். தொலைதூரத்திலிருந்து எதிர்பார்த்த நல்ல செய்தி வந்துசேரும்.

**துலாம்:** உங்கள் முயற்சிகளுக்கு உறவினர்கள் ஒத்துழைப்புத் தருவார்கள். பிள்ளைகளின் விருப்பத்தை நிறைவேற்றுவீர்கள். ஆனால், எதிரிகள்வகையில் சில பிரச்சினைகள் ஏற்படக் கூடும் என்பதால் எச்சரிக்கையாக இருப்பது நல்லது.

**விருச்சிகம்:** வீண் அலைச்சலைத் தவிர்க்கவும். மற்றவர்களுடன் வீண்மனஸ்தாபம் ஏற்படக்கூடும் என்பதால், பேசும்போது கவனமாக இருக்கவும். காரியங்களில் சிறுசிறு தடைகள் ஏற்பட்டாலும் பாதிப்பு எதுவும் இருக்காது.

**தனுசு:** உறவினர்களால் ஆதாயம் உண்டா கும். குடும்பத்தில் கலகலப்பான சூழ்நிலையே காணப்படும். வாழ்க்கைத்துணைவழி உறவுகளுக்காக செலவு செய்யவேண்டி வரும். கணவன்–மனைவிக்கிடையே அந்நி யோன்யம் அதிகரிக்கும்.

**மகரம்:** புதிய முயற்சி எதுவும் இன்றைக்கு வேண்டாம். அவ்வப்போது மனதில் குழப்பம் ஏற்பட்டு நீங்கும். செலவுகளைச் சமாளிக்க கடன் வாங்கவேண்டிய சூழ்நிலையும் சில ருக்கு ஏற்படும்.

**கும்பம்:** தந்தையிடம் எதிர்பார்த்த பண உதவி கிடைக்கும். சகோதரர்களுக்காக செலவு செய்யவேண்டிவரும். சிலருக்கு நண்பர்கள் மூலம் பணவரவு கிடைப்பதற்கு வாய்ப்பு உண்டு.

**மீனம்:** எதிர்பார்த்த பணம் கைக்குவரும். பிள்ளைகள்வழியில் எதிர்பாராத செலவு களும் ஏற்படக்கூடும். அவர்களின் உடல் ஆரோக்கியத்தி லும் கவனம் செலுத்தவும். நண்பர்களால் சிற்சில சங்கடங்களைச் சமாளிக்கவேண்டிவரும்.

# தீபாவளி விழாவும் பரிசளிப்பு நிகழ்வும்

சாவகச்சேரி கல்வயல் ஆயிலடி வீரகத்தி விநாயகர் ஆல யத்தில் தீபாவளி விழாவும், பரிசளிப்பு நிகழ்வும் ஆலய அறநெறிப்பாடசாலை அதிபர் விவேகானந்தன் மயூரன் தலைமையில் எதிர்வரும் 20ஆம் திகதி திங்கட்கிழமை மாலை 3 மணிக்கு இடம்பெறவுள்ளது. கலைநிகழ்வுகளும் நடைபெறவுள்ளன என்று அறிவிக்கப்பட்டுள்ளது. ஆலயப் பிரதமகுரு சிவஸ்ரீ சி. கிருபாகரக்குருக்கள் முன்னிலை வகிக்க கோப்பாய் ஆசிரியர் கலாசாலை, சிரேஷ்ட விரி வுரையாளர் சைவப்புலவர் சி. கா. கமலநாதன் பிரதம அதிதியாகவும், கோப்பாய் ஆசிரியர் கலாசாலை சிரேஸ்ட விரிவுரையாளர் கவிஞர் வேல். நந்தகுமார் மற்றும் தொல லியல் திணைக்கள மேலாய்வு உத்தியோகத்தர் க.கயி லைவாசன் ஆகியோர் சிறப்பு அதிதிகளாகவும் கலந்து கொள்ளவுள்ளனர். (ஏ–25)

## நல்லூர் பிரதேச சபை
## கொக்குவில்
## 2026ம் ஆண்டிற்கான கேள்வி அறிவித்தல்

நல்லூர் பிரதேச சபையின் அதிகார எல்லைக்குட்பட்ட கீழ்க்காணும் சந்தைகள், துவிச்சக்கரவண்டி பாதுகாப்பு நிலையம் இறைச்சிக்கடைகள், என்பவற்றை 01.01.2026ம் திகதி தொடக்கம் 31.12.2026ம் திகதி வரை குத்தகைக்கு விடுவதற்கான கேள்விகள் கோரப்பட்டுள்ளன.

கேள்விப் பத்திரம் வழங்கும் காலம் : 17.10.2025 – 30.10.2025 திகதி பி.ப 3.00 மணி வரை
கேள்விப்பத்திரம் ஏற்றுக்கொள்ளும் இறுதித்திகதி : 31.10.2025 திகதி மு.ப 11.00 மணி வரை
கேள்விப்பத்திரம் திறக்கப்படும் திகதி : 31.10.2025 திகதி மு.ப 11.00மணிக்கு
கேள்விப்பத்திரம் திறக்கப்படும் இடம் : கலந்துரையாடல் மண்டபம், தலைமை அலுவலகம், நல்லூர் பிரதேச சபை

1. கேள்விப்பத்திரங்கள் இரண்டு பிரதிகளில் தயாரிக்கப்பட்டு, மூலப்பிரதியுட்பட இரு பிரதிகளையும் செயலாளர், நல்லூர் பிரதேச சபை, 14/5,கருவப்புலம் வீதி, கொக்குவில் கிழக்கு, கொக்குவில் என்ற முகவரிக்கு அரக்கு முத்திரையிட்டு, தபால் உறையின் இடது பக்க மேல் மூலையில் கேள்வியின் பெயர் தெளிவாக இடப்பட்டு, பதிவுத்தபால் மூலம் அனுப்புதல் வேண்டும் அல்லது இதற்கென அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப்பெட்டியில் உரிய நேரத்திற்கு முன் இடுதல் வேண்டும். காலந்தாழ்த்தப்பட்ட கேள்விகள் நிராகரிக்கப்படும்.
2. அட்டவணையில் உள்ளவாறு மீளளிக்கப்படாத படிவக்கட்டணம் மற்றும் மீளளிக்கப்படக்கூடிய வைப்புப்பணம் என்பவற்றை செலுத்தி கேள்விப்பத்திரங்களை பிரதேச சபையின் தலைமை அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம். கேள்விப் பத்திரங்களை பெறுபவர்கள் தமது தேசிய அடையாள அட்டையையும் கிராம அலுவலரினால் வழங்கப்படும் வதிவிடச் சான்றிதழையும் கொண்டு வருதல் வேண்டும்.
3. கேள்விப்படிவக்கட்டணம், கேள்வித் தொகை, மாத வாடகை என்பவற்றுக்கு காலத்திற்குக் காலம் அரசாங்கத்தினால் விதிக்கப்படும் வரியும் செலுத்தப்பட வேண்டும்.
4. உள்ளூராட்சி மன்றங்களினால் “தவறுனராக” கணிக்கப்பட்ட எவருக்கும் கேள்விப்பத்திரம் வழங்கப்படமாட்டாது. எனினும் படிவம் வழங்கப்பட்ட பின் அறியும் பட்சத்தில் அவரின் கேள்வி நிராகரிக்கப்படும்.
5. மரக்கறிச் சந்தைக்கான கேள்வியில் சித்தியடையும் கேள்விக்காரர் உள்ளூராட்சி ஆணையாளரின் 03/2015 இலக்கமும் 09.11.2015 திகதியும் உடைய சுற்றுநிருபத்திற்கு அமைவாக இணங்குதல் வேண்டும்.
6. மரக்கறிச் சந்தையைக் குத்தகைக்கு எடுப்பவர்கள் உற்பத்தியாளர்கள் கொண்டுவரும் பொருட்களின் விற்பனை விலையில் 4% ற்கு மேல் வரி அறவிடக்கூடாது. என்பதுடன், விவசாய உற்பத்திப் பொருட்களை விற்பனை செய்ய சந்தைக்கு வரும் உற்பத்தியாளர்களிடமிருந்த தரகுப் பணம் எதுவும் அறவிடப்படலாகாது.
7. இறைச்சிக்காக வெட்டப்படும் கால்நடைகள் கொக்குவில் கொல்களத்தில் வெட்டப்படுதல் வேண்டும். இறைச்சிக்காக மறி ஆடுகள், பசு மற்றும் கன்றுகள் அறுக்கப்படுவது அனுமதிக்கப்படமாட்டாது. இறைச்சிக்காக கொள்வனவு செய்யப்படும் கால்நடைகளுக்கு அப்பகுதி கால்நடை வைத்திய அதிகாரியின் நோய்த்தொற்று இல்லை என்ற சுகாதாரச் சான்றிதழ் பெறப்பட்டிருக்க வேண்டும். மேலும் சுகாதார வைத்திய அதிகாரியினால் கால்நடைகளுக்கான நோய்த்தாக்கம் தொடர்பாக பிரகடனப்படுத்தப்படும் பொழுது கொல்கள செயற்பாடுகள் நிறுத்தப்படும். அத்துடன் சபையால் விதிக்கப்படும் மேலதிக நிபந்தனைகளுக்கும் கட்டுப்படுதல் வேண்டும்.
8. இறைச்சிக் கடைகளுக்கான கேள்வியில் சித்திபெறும் கேள்விதாரர் சுகாதார வைத்திய அதிகாரியால் அறிவிக்கப்படும் சுகாதார மேம்பாட்டு விடயங்களைக் கருத்திற்கொள்ளத் தவறுமிடத்து குத்தகை ஒப்பந்தத்தினை இரத்துச் செய்வதற்கு சபைக்கு அதிகாரம் உண்டு.
9. அரசாங்கத்தினால் மாடு இறைச்சிக்காக வெட்டுவது தடை செய்யப்படும் பட்சத்தில் சபையினால் கேள்விதாரருடன் செய்யப்பட்ட குத்தகை உடன்படிக்கை இரத்துச் செய்யப்படும்.
10. இறைச்சிக் கடைகளின் வெளிப்புறத்தே இறைச்சிகளுக்கான விலைப்பட்டியல் காட்சிப்படுத்தப்பட வேண்டும்.
11. இறைச்சிகளுக்கான விலையில் மாற்றம் செய்வதாயின் பிரதேச சபையின் ஒப்புதலைப் பெற்ற பின்னரே மாற்றம் செய்யப்பட வேண்டும்.
12. திருநெல்வேலிச் சந்தையில் விசேட பண்டிகை நாட்களில் நடைபாதை மற்றும் வீதியோர வியாபார நடவடிக்கைகள் அனுமதிக்கப் படமாட்டாது என்பதுடன், சபையினால் ஒதுக்கப்பட்ட இடங்களில் மட்டும் வியாபார நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு வரி அறவிட அனுமதிக்கப்படும்.
13. எந்தவொரு கேள்வியையும் ஏற்கவோ அல்லது நிராகரிக்கவோ கேள்விச்சபைக்கு பூரண அதிகாரம் உண்டு.
14. ஏற்றுக்கொள்ளக் கூடிய குறைந்த கேள்வித் தொகையிலும் குறைவான கேள்வி கோருபவர்களின் கேள்வி வைப்புப்பணம் சபை நிதிக்கு மாற்றப்பட்டு கேள்விகாரரின் பெயர் “தவறுனர்” பட்டியலில் சேர்க்கப்படும்.
15. கேள்வி திறக்கப்படும் சந்தர்ப்பத்தில் கேள்விதாரரோ அல்லது அவரது பிரதிநிதியோ சமூகமளிக்கலாம்.
16. தெரிவு செய்யப்படும் கேள்விக்காரர் கேள்வித்தொகையின் 1/3 பகுதியை 2025.11.11ம் திகதிக்கு முன்னர் செலுத்தி சபையுடன் ஒப்பந்தம் ஒன்றினைச் செய்து கொள்ள வேண்டும்.
17. கேள்வி தொடர்பான மேலதிக விபரங்களை தலைமை அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

### 2026ம் ஆண்டுக்கு சந்தைகள், துவிச்சக்கர வண்டிப் பாதுகாப்பு நிலையம், இறைச்சிக்கடைகளுக்கான குத்தகை அட்டவணை

| இல | சந்தைகள், துவிச்சக்கர வண்டிப் பாதுகாப்பு நிலையம், இறைச்சிக்கடைகள் | மீளளிக்கப்படாத கேள்விப்படிவக் கட்டணம் | மீளளிக்கப்படும் கேள்வி வைப்புப்பணம் | 2026 ஏற்றுக்கொள்ளக் கூடிய ஆகக்குறைந்த கேள்வித் தொகை (வற்வரி தவிர்ந்த) ரூபா. |
|---|---|---|---|---|
| **நல்லூர் உப அலுவலகம்** | | | | |
| 1 | திருநெல்வேலிச்சந்தை (துவிச்சக்கர வண்டிப்பாதுகாப்பு நிலையம் மற்றும் மீன் சந்தை நீங்கலாக) | 1,000.00 | 454,000.00 | 45,320,000.00 |
| 2 | திருநெல்வேலிச்சந்தை துவிச்சக்கர வண்டிப்பாதுகாப்பு நிலையம் | 1,000.00 | 22,000.00 | 2,201,000.00 |
| **கொக்குவில் உப அலுவலகம்** | | | | |
| 1 | கொக்குவில் குளப்பிட்டிச் சந்தை (துவிச்சக்கர வண்டிப்பாதுகாப்பு நிலையத்துடன்) | 1,000.00 | 30,000.00 | 2,861,500.00 |
| 2 | கொக்குவில் சந்தை ஆட்டிறைச்சிக் கடை | 1,000.00 | 16,500.00 | 1,606,000.00 |
| 3 | கொக்குவில் சந்தை கோழியிறைச்சிக் கடை | 1,000.00 | 11,500.00 | 1,133,000.00 |
| 4 | கொக்குவில் உப அலுவலக ஆட்டிறைச்சிக் கடை | 1,000.00 | 15,000.00 | 1,453,500.00 |
| 5 | கோண்டாவில் ஸ்ரேசனடி ஆட்டிறைச்சிக் கடை இல 01 | 1,000.00 | 11,500.00 | 1,111,110.00 |
| 6 | கோண்டாவில் ஸ்ரேசனடி ஆட்டிறைச்சிக் கடை இல 02 | 1,000.00 | 6,500.00 | 640,200.00 |
| 7 | கொக்குவில் உப அலுவலக மாட்டிறைச்சிக் கடை | 1,000.00 | 7,500.00 | 750,000.00 |
| 8 | கோண்டாவில் ஸ்ரேசனடி மாட்டிறைச்சிக்கடை | 1,000.00 | 5,500.00 | 546,000.00 |

தவிசாளர்,
நல்லூர் பிரதேச சபை,
கொக்குவில்.

17.10.2025.

(CR/46115) J-1

## காதல் தோல்வி

# தவறான முடிவெடுத்து யுவதியொருவர் சாவு!

யாழ்ப்பாணம், ஒக். 17

கிளிநொச்சி - ஆனந்தபுரம் பகுதியைச் சேர்ந்த 21 வயதுடைய யுவதியொருவர் காதல் தோல்வி காரணமாக தவறான முடிவெடுத்து உயிரிழந்துள்ளார்.

கடந்த 14ஆம் திகதி உயிர்மாய்க்க முயற்சித்தபோது உறவினர்களால் காப்பாற்றப்பட்ட அவர், யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டிருந்தார். இந்த நிலையில் மேலதிக சிகிச்சையின்போது நேற்று உயிரிழந்தார்.

இறப்பு விசாரணைகளை யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் திடீர் இறப்பு விசாரணை அதிகாரி நமச்சிவாயம் பிறேம்குமார் மேற்கொண்டார். (அ-ம-26)

## '13' நடைமுறை...

தார். ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தலைமையகத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் நிறைவேற்றப்பட்டுள்ள தீர்மானத்தில் அரசியலமைப்பின் 13ஆவது திருத்தச் சட்டம் முழுமையாக நடைமுறைக்கு வரவேண்டும் என்று வலியுறுத்தப்பட்டுள்ளது. அவ்வாறு செய்தால் இலங்கை சமஷ்டி நாடாக மாற்றம்பெறும். குறிப்பாக வடக்கு மாகாணசபை சுயாதீனமாக மாற்றம் பெறும். பின்னர், அவர்களின் தேவைக்கு ஏற்ப சட்டங்களை உருவாக்கவும் வழிகள் அமையும்.

இவ்வாறானதொரு நிலைமைக்கே பிரபாகரன் முயற்சித்தார். அதற்காக 30 வருடங்கள் போரிட்டார். போர் மூலம் அடைய முடியாமல்போனதை வேறு வழியில் அடைவதற்குரிய முயற்சியாகவே இது உள்ளது. எனவே, 13 ஆவது திருத்தத்தை நடைமுறைப்படுத்த நாங்கள் அனுமதிக்க மாட்டோம். அது இலங்கையின் இறைமைக்கு விடுக்கப்படும் அச்சுறுத்தலாகும் -என்றார். (அ-ம-44)

## கச்சதீவை...

இன்று இந்தியாவுக்குச் சென்றுள்ளார். இந்திய வெளிவிவகார அமைச்சருடனான சந்திப்பைத் தொடர்ந்து, அவர் இந்தியப் பிரதமர் மோடியையும் சந்தித்துக் கலந்துரையாடல் நடத்தவுள்ளார். இவ்வாறான நிலையிலேயே, கச்சதீவு மீட்புத் தொடர்பில் ஹரிணியுடன் பேசுமாறு பிரதமர் மோடிக்கு ஸ்டாலின் கடிதம் அனுப்பியுள்ளார்.

இது தொடர்பில் முதல்வர் ஸ்டாலின் அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் உள்ளதாவது:-

இலங்கையின் பிரதமர் ஹரிணி, மூன்று நாள்கள் பயணமாக இந்தியாவுக்கு வந்துள்ளதை, தமிழக மீனவர்களின் கோரிக்கையை நிறைவேற்றும் மிகச் சிறந்த சந்தர்ப்பமாக இதனை இந்திய மத்திய அரசு பயன்படுத்தவேண்டும். இந்திய மீனவர்களின் மீன்பிடி உரிமையை உறுதிப்படுத்துவதற்கு, பிரதமர் ஹரிணியின் இந்தியப் பயணம் நல்லதொரு சந்தர்ப்பம்.

இலங்கையின் சிறைச்சாலைகளில் தற்போது 76 இந்திய மீனவர்கள் உள்ளனர். 250 படகுகள் இலங்கையால் கைப்பற்றப்பட்டுள்ளன. இந்தப் பிரச்சினைக்கு விரைவான முற்றுப்புள்ளி அவசியம் தேவை - என்றுள்ளது. (அ-ம)

## கடற்படைக்கு...

சபா மண்டபத்தில் நேற்று நடைபெற்றபோது, றேடர் அமைப்பதற்காக கீரிமலைப் பகுதியில் கடற்படையினர் காணிகளைக் கோரும் விடயம் தொடர்பில் சுட்டிக்காட்டப்பட்டது.

இதன்போது, போதைப்பொருள் ஒழிப்புக்காக றேடர் அமைக்கவே காணி கோரப்படுவதாக தெரிவித்த தேசிய மக்கள் சக்தி உறுப்பினர், காணி உரிமையாளர்களுக்கு சன்மானம் வழங்கப்படும். அதில் அரசியல் செய்யவேண்டாம் எனத் தெரிவித்தார்.

இதற்கு கடும் எதிர்ப்பு தெரிவித்த தவிசாளரும் ஏனைய கட்சி உறுப்பினர்களும், போதைப்பொருள் ஒழிப்புக்கும் காணி சுவீகரிப்புக்கும் சம்பந்தம் இல்லை. றேடர் அமைப்பதற்கு இரண்டு ஏக்கர் தேவையில்லை. மக்களின் காணி மக்களுக்கே எனக் கூறிவிட்டு மக்கள் காணிகளை சுவீகரிக்க அனுமதிக்க முடியாது என்று தெரிவித்தனர். இந்த விடயம் தீர்மானமாகவும் நிறைவேற்றப்பட்டதுடன், திட்டத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்து பிரதேச செயலருக்குக் கடிதம் அனுப்பவும் தீர்மானிக்கப்பட்டது. (அ-ம-26)

## மின்கம்பத்தில்...

பெண்கள் உயிரிழந்தனர். ஏழாலை வடக்குப் பகுதியைச் சேர்ந்த திருமதி அகிலன் திவ்யா (வயது-31), திருமதி சிவபாக்கியம் சிவதாசன் (வயது-85) ஆகியோரே உயிரிழந்தவர்களாவர்.

உறவினரின் திருமணத்தில் கலந்துகொள்வதற்காக யாழ்ப்பாணம் - ஏழாலைப் பகுதியில் இருந்து சென்றவர்களின் ஹைஏஸ் வாகனமே இவ்வாறு விபத்துக்கு உள்ளாகியுள்ளது. சாரதியின் தூக்கக் கலக்கமே விபத்துக்குக் காரணம் என்று முதற்கட்ட விசாரணைகளின் அடிப்படையில் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சம்பவத்தில் மற்றொரு வயோதிபப் பெண் படுகாயமடைந்த நிலையில், அவர் தலாவ மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு முதற்கட்ட சிகிச்சைக்குப் பின்னர், மேலதிக சிகிச்சைக்காக அநுராதபுரம் மருத்துவமனைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

சம்பவத்தில் உயிரிழந்த இளம் குடும்பப் பெண் சில மாதங்களுக்கு முன்னரேயே திருமணமானவர் என்றும் தெரியவந்துள்ளது. மேலதிக விசாரணைகளை தலாவப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (அ-ம-66-26)

## முள்ளியவளை...

கல்லூரிக்கு முன்பாக உள்ள முதன்மை வீதியில் சைக்கிளும், வாகனமும் விபத்துக்கு உள்ளானதில், குறித்த முதியவர் படுகாயமடைந்திருந்தார். இதையடுத்து, அவர் முல்லைத்தீவு மாவட்ட மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு பின்னர் மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கு மாற்றப்பட்டிருந்தார். இதையடுத்தே, மேலதிக சிகிச்சையின் போது நேற்றுமுன்தினம் உயிரிழந்தார்.

வாகனத்தின் சாரதி முள்ளியவளை பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ள நிலையில், மேலதிக விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன. இறப்பு விசாரணைகளை யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ந.பிறேம்குமார் மேற்கொண்டார். (அ-ம-26-19)

## தகரக்...

பகுதியைச் சேர்ந்த ஹரிகரன் ராஜன் டலஸ்குமார் (வயது-36) என்ற குடும்பத் தலைவரே இவ்வாறு உயிரிழந்தவராவார்.

கடந்த 14ஆம் திகதி இரவு படுகாயமடைந்த அவர் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டிருந்தார். இந்த நிலையில், மேலதிக சிகிச்சையின்போது நேற்று உயிரிழந்தார். இறப்பு விசாரணைகளை யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் திடீர் இறப்பு விசாரணை அதிகாரி நமச்சிவாயம் பிறேம்குமார் மேற்கொண்டார். (அ-ம-26)

## கடலாமை...

யாழ்ப்பாணம் மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகரின் கீழ் இயங்கும் பொலிஸ் புலனாய்வுப் பிரிவினருக்கு கிடைத்த இரகசியத் தகவலின் அடிப்படையில் இந்தக் கைது நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது. விசாரணைகளின் பின்னர் சந்தேக நபரை நீதிமன்றத்தில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகளை பொலிஸார் மேற்கொண்டுவருகின்றனர். (அ-ம-26-20)

## சுற்றுலாப்...

(வயது-61) எனும் மீன் வியாபாரியே இவ்வாறு உயிரிழந்தவராவார்.

யாழ்ப்பாணத்தில் இருந்து நயினாதீவு நோக்கி பயணித்த சொகுசுப் பேருந்து, யாழ்ப்பாணம் - ஊர்காவற்றுறை வீதியில், அல்லைப்பிட்டி சந்திக்கு அருகாகப் பயணித்த மோட்டார் சைக்கிளை மோதியதைத் தொடர்ந்தே இந்த விபத்து சம்பவித்துள்ளது.

விபத்தில் குறித்த நபர் படுகாயமடைந்த நிலையில், அவர் உடனடியாக மீட்கப்பட்டு யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட போதிலும், அவர் மேலதிக சிகிச்சையின் போது உயிரிழந்தார். இறப்பு விசாரணைகளை யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் திடீர் இறப்பு விசாரணை அதிகாரி நமச்சிவாயம் பிறேம்குமார் மேற்கொண்டார். (அ-ம-26-20)

## ரயிலால்...

சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது:-

கொழும்பில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கி ரயிலில் பயணித்த அந்தப் பெண், சாவகச்சேரி - சங்கத்தானைப் பகுதியில் இறங்க முற்பட்டுள்ளார். அவர் அமர்ந்திருந்த பெட்டிக்கு அருகில் வெளிச்செல்லும் பகுதி இல்லாததால், வேறு பகுதியூடாகச் சென்று இறங்க முற்பட்டுள்ளார். இதன்போது ரயிலும் நகரத் தொடங்கியுள்ளது. இதையடுத்து, அந்தப் பெண் கீழே வீழ்ந்து படுகாயம் அடைந்துள்ளார். அவர் சாவகச்சேரி ஆதார மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட நிலையில், சிகிச்சையின் போது உயிரிழந்துள்ளார்.

பல்கலைக்கழகம் ஒன்றில் கற்கும் மகனைப் பார்ப்பதற்காகச் சென்றுவிட்டுத் திரும்பியபோதே, இந்தத் துயரச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. மேலதிக விசாரணைகளை சாவகச்சேரிப் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (அ-ம-23-28)

## தமிழ்த்...

ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியின் பங்காளிக் கட்சிகள் 13ஆவது திருத்தத்தை முற்றாக நடைமுறைப்படுத்த வேண்டும் என்று தொடர்ச்சியாக வலியுறுத்தி வருகின்றன. இது தொடர்பில் அவர்கள் தமக்குள் ஒன்றுகூடிக் கலந்துரையாடல்களையும் நடத்தியுள்ளனர். இதையடுத்தே, தமிழ்த் தேசியப் பேரவையை உருவாக்கும்போது செய்துகொண்ட ஒப்பந்தத்துக்கு முரணாக அந்தக் கட்சிகள் நடந்துகொண்டதாகக் கருதி, பேரவையில் இருந்து வெளியேறுவதற்கு தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி தீர்மானித்துள்ளது.

இந்த விடயம் தொடர்பில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் நேற்று செய்தியாளர்கள் சந்திப்பொன்றையும் நடத்தியுள்ளார். அதில், பேரவையில் பங்காளித் தரப்பாக உள்ள ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியினரின் செயற்பாட்டில் அதிருப்தி தெரிவித்ததுடன், கடுமையான விமர்சனங்களையும் முன்வைத்துள்ளார்.

இது தொடர்பில் நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்ததாவது:-

ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியின் பங்காளிக் கட்சிகள் ஒன்றிணைந்து 13 ஆவது திருத்தம் தொடர்பில் கதைத்துள்ளனர். நாங்கள் ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியோடு செய்துகொண்ட ஒப்பந்தத்தில் ஒற்றையாட்சி முறைக்குள் தமிழ்த் தேசிய அரசியலை நடத்துவதற்கு இடமில்லை என்று தெளிவாகக் குறிப்பிட்டுள்ளோம். அத்துடன், 13ஆவது திருத்தம் தமிழர்களுக்கான தீர்வல்ல, 'ஏக்கிய ராஜ்ஜிய' யோசனைகளுக்கும் இடமில்லை என்றும் தெளிவாகக் கூறியுள்ளோம். இவற்றுக்கெல்லாம் இணங்கியே ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியினர் எம்முடன் ஒப்பந்தங்களை மேற்கொண்டனர். ஆனால், எங்களுடன் செய்துகொண்ட ஒப்பந்தத்துக்கு முரணாகவே தற்போது அவர்கள் செயற்பட்டு வருகின்றனர்.

கடந்த உள்ளூராட்சித் தேர்தலில் எம்முடன் ஒப்பந்தத்தைச் செய்துகொண்டு எம்மூடாகப் பதவிகளைப் பெற்றுவிட்டு தற்போது ஒப்பந்தங்களுக்கு முரணாகச் செயற்படுகின்றமையை ஏற்க முடியாது. என்பதுடன், இந்தச் செயற்பாட்டை அவர்கள் தாமாகவே ஒப்பந்தத்தில் இருந்து விலகிய செயற்பாடாகவே நாங்கள் பார்க்கின்றோம்.

நாங்கள் மீண்டும் மீண்டும் ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியினருக்கு வலியுறுத்துவது என்னவென்றால், தமிழ் மக்களுக்கு மோசமான தீங்குகளை ஏற்படுத்தும் செயற்பாடுகளைச் செய்யாதீர்கள் என்பதே. இந்தச் செயற்பாடுகள் சுமந்திரன் போன்றோரின் தமிழர் விரோதச் செயற்பாட்டை வலுப்படுத்துவதாகவே அமைந்துவிடும் - என்றார். (அ-ம-26)

# முதியோர்தின நிகழ்வு இன்று

கிளிநொச்சி, ஒக்.17
வடமாகாண சமூக சேவைகள் திணைக்களத்தின் ஏற்பாட்டில், சர்வதேச முதியோர் தினம் மற்றும் முதியோரின் ஆரோக்கிய வாழ்வுக்கு வழிகாட்டல் முகாம் கிளிநொச்சி கூட்டுறவுக் கலாசார மண்டபத்தில் இன்று வெள்ளிக்கிழமை மு.ப 9 மணிக்கு நடைபெறவுள்ளன. (எ-25)

# பெண் உரிமை முன்னேற்றத்தில் உறுதியாகச் செயற்படும் இலங்கை

## பிரதமர் ஹரிணி தெரிவிப்பு



**பீஜிங், ஒக்.17**
**பெண்களின் உரிமைகள் மற்றும் சமத்துவத்தை முன்னேற்றுவதில் இலங்கை உறுதியாக உள்ளது என்று பிரதமர் கலாநிதி ஹரிணி அமரசூரிய தெரிவித்துள்ளார்.**

சீனாவின் பீஜிங்கில் நடைபெற்ற பெண்கள் பற்றிய உலகத் தலைவர்களின் மாநாட்டில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

1995ஆம் ஆண்டு நடைபெற்ற உலக பெண்கள் மாநாட்டிலிருந்து இதுவரை பல முன்னேற்றங்கள் ஏற்பட்டுள்ளபோதும், பெண் பணியாளர் பங்கேற்பு 48.7 சதவீதமாக மட்டுமே காணப்படுகின்றமை உட்பட பிரதானமான குறைபாடு கள் தற்போதும் உள்ளன.

அதேவேளை, பெண் கல்வியறிவு அதிகரித்துள்ளது. அறிவியல் மற்றும் தொழில்நுட்பத் துறைகளில் பட்டம் பெற்றவர்களில், பெண்கள் சுமார் 35 சதவீதமாக உள்ளனர். பெண்களின் அனைத்துத் துறையிலான மேம்பாடு என்பது கல்வி, சுகாதாரம், பொருளாதாரம், அரசியல், சமூகம் மற்றும் கலாசாரம் ஆகியவற்றை உள்ளடக்கிய ஒரு முழுமையான செயன்முறை. அதற்குத் தொடர்ச்சியான அர்ப்பணிப்புத் தேவை. உலகில் எந்தவொரு நாடும் பாலின சமத்துவத்தை முழுமையாக அடையவில்லை- என்றார். (எ-இ)


## மணல் விற்பனைக்கு

கட்டிட வேலைகளுக்கு அரச அங்கீகாரம் பெற்ற பழுப்பு நிற மணல் விற்பனைக்கு உண்டு.
தென்மராட்சி 50,000 யாழ்மாவட்டம் 55,000
வடமராட்சி 55,000 விநியோகிக்கப்படும்.
மற்றும் கனரக வாகனங்களுக்கு யாழ் மாவட்ட வீதி அனுமதிப்பத்திரம் போட்டு தரப்படும்.
(CR/46116) D*
தொடர்புகளுக்கு: 077 412 1100


# மரண அறிவித்தல்

தோற்றம் 13 . 10 . 1941



மறைவு 16 . 10 . 2025

## நாகரட்ணம் விக்கினேஸ்வரன்

**(ஓய்வுநிலை ஆசிரியர்)**

அராலி வடக்கு செட்டியார் மடத்தைப் பிறப்பிடமாகவும், சுதுமலை தெற்கை வசிப்பிடமாகவும் கொண்ட நாகரட்ணம் விக்கினேஸ்வரன் அவர்கள் நேற்று (16.10.2025) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நாகரட்ணம் - சின்னம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான சிந்தாமணி - செல்லம்மா தம்பதியரின் மருமகனும், காலஞ்சென்ற சிவானந்தமலரின் அன்புக் கணவரும், யமுனா (வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை), ஐங்கரன் (Dewmas) ஆகியோரின் பாசமிகு தந்தையும், மகேந்திரனின் (கொமர்ஷியல் வங்கி, புதுக்குடியிருப்பு) அன்பு மாமனும், கேசரனின் பாசமிகு பேரனும், காலஞ்சென்றவர்களான புனிதவதி, சுகிர்தலட்சுமி, மகேசன் மற்றும் நித்தியலட்சுமி (கனடா), சிற்சபேசன் (பிரான்ஸ்), சாந்தினி (அமெரிக்கா) ஆகியோரின் பாசமிகு சகோதரனும், புவனேஸ்வரி (இளைப்பாறிய ஆசிரியை) மற்றும் காலஞ்சென்றவர்களான மகேசன், தேவராசன், பூபாலசிங்கம், இராமச்சந்திரன் மற்றும் லங்காதேவி, ஜெகதீஸ்வரி, மனோரஞ்சன் (அமெரிக்கா) ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (17.10.2025) வெள்ளிக்கிழமை காலை 09.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக தாவடி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்: குடும்பத்தினர்
மகன் (ஐங்கரன்) - 077 996 9661
மருமகன் (மகேந்திரன்) - 077 390 5115

சுதுமலை தெற்கு,
மானிப்பாய்.

(CS/59665) J-1

# 47 கிலோ கஞ்சாவுடன் பூநகரியில் இருவர் கைது

கிளிநொச்சி, ஒக்.17
47 கிலோ கேரளக் கஞ்சாவை உடைமையில் வைத்திருந்த குற்றச்சாட்டில் இருவர் விசேட அதிரடிப்படையினரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர். கடத்தலுக்குப் பயன்படுத்தியதாகக் கருதப்படும் வாகனம் ஒன்றும் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது. விசேட அதிரடிப்படையினருக்குக் கிடைத்த இரகசியத்தகவலுக்கு அமைய நேற்றுமுன்தினம் புதன்கிழமை இரவு யாழ்ப்பாணம் நோக்கி பயணித்த வாகனம் ஒன்று பூநகரிப் பகுதியில் வழி மறிக்கப்பட்டு சோதனையிடப்பட்டது.



அதில் 22 பொதிகளில் பொதிசெய்யப்பட்ட 47 கிலோ 200 கிராம் கேரளக் கஞ்சா கைப்பற்றப்பட்டது. சந்தேகநபர்கள் விசாரணையின் பின்னர் நீதிமன்றில் முற்படுத்தப்படுவார்கள் என்று பொலிஸார் தெரிவித்தனர். (எ-25,28)

# கோப்பாய் கலாசாலையில் வீரமணி ஐயர் நினைவரங்கம்

யாழ்ப்பாணம், ஒக்.17
கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையில் 33 ஆண்டுகள் விரிவுரையாளராகப் பணியாற்றிய மகாவித்துவான் ம.த.ந. வீரமணி ஐயர் நினைவரங்கம் கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையின் அதிபர் ச. லலீசன் தலைமையில் கலாசாலையின் ரதிலட்சுமி மண்டபத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை நடைபெற்றது.

நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். பல்கலைக் கழக சேர்.பொன்னம்பலம் இராமநாதன் காண்பிய ஆற்றுகைக் கலைகள் பீடத்தின் பீடாதிபதி தவமைந்தன் றொபேட் அருட்சேகரன் கலந்து கொண்டு "தமிழிசை வளர்ச்சியில் வீரமணி ஐயரின் பங்களிப்பு" என்ற பொருளில் நினைவுப்பேருரை ஆற்றினார். வீரமணிஐயர்பற்றிய ஆவணக்காணொலியை ஆசிரிய மாணவி கௌசிகா காட்சிப்படுத்தினார். நடனத்துறை விரிவுரையாளர் ரஜிதா சின்னத்துரை அதிதிக்கான அறிமுக உரையை ஆற்றினார். கலாசாலையில் உள்ள வீரமணி ஐயர் திருவுருவச் சிலைக்கான வழிபாடும் இடம்பெற்றது. (ச-25,27,66,9)





இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 17.10.2025 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.